இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 113 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 16 – சனிக்கிழமை 02 டிசம்பர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 113 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 16 - Saturday 02 December 2023 - Chennai 16 Pages ₹ 5.00

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (10)

# சாக்ரடீஸ் சாகாத சரித்திரம்!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘இளைஞர்களுக்கு வழி விடுவோம்’ எனும் தலைப்பில் முரசொலி’யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 ‘கலைஞர் கடிதங்கள்’ எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

விடுதலைப் போராட்ட வீரர்கள், தியாகிகள், தீரர்கள் ஆகியோரைப் பற்றியும், அவர்கள் தங்கள் இளமைக் காலத்தில் இயற்றிய சாதனைகளைப் பற்றியும் இந்தக் கடிதத் தொடரில் விவரித்து வருகின்றேன்.

கி.மு. ஐந்தாவது நூற்றாண்டில் வாழ்ந்த அரசியல் மேதைகள், தத்துவ ஞானிகள் பற்றியும் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்பு, கி.மு. 470ஆம் ஆண்டு வாக்கில், கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரத்தில் அழகு குறைந்த ஒரு மனிதர், அறிவு செறிந்த கருத்துக்களை இந்த அவனிக்கு வழங்க முன்வந்தார். அதற்கென அயராது பாடுபட்டார். ஆவி தரவும் முற்பட்டார். அவர் அலைந்து திரியாத இடமே இல்லை. அப்போது அவர் குரலைக் கேட்காத மனிதர்கள் கிடையாது. அரசியல் மேதாவிகள், தத்துவ ஞானிகள், அறிஞர்கள் ஆகியோர் வரிசையில், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரை வைத்து எண்ணப்படுவதைப் போல, இந்த மனிதரின் பெயரும் இவர்களுக்கு முன்னர் வைத்து எண்ணப்பட்டது. அந்தப் பெயர்தான் சாக்ரடீஸ்.

அவர் புகழ் பரவப் பரவ, அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பொறாமைக்காரர்கள் சிலர், அவர் வாழ்வையே முடித்துவிட வேண்டுமென்று

### கலைஞர் கடிதம்

திட்டமிடும் வஞ்சகர்களாகத் தோன்றினர். அனிடஸ், லைகான், மெலிடஸ் என்ற அந்த மூவரும் தான் ஏதென்ஸ் நகரத்து நீதி மன்றத்தில் சாக்ரடீசை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறார்கள்.

“தெளிவற்ற வார்த்தைகளையும் குழப்பமான வாதங்களையும் எடுத்து வைத்து இளைஞர்களைக் கெடுக்கிறார் என்பதும், தேச மதத்திற்கும், தேசத்திற்கும் எதிரான குற்றங்களைச் செய்தார் என்பதும், பக்தியின்மையை பரப்புகிறார் என்பதும் அவர்மீது சாற்றப்பெற்ற குற்றச்சாட்டுகளாகும்.

பிளேட்டோ எழுதிய “அபாலஜி” என்ற நூலில், சாக்ரடீஸ் கடவுள் நம்பிக்கை இல்லாதவர் (Agnostic) ஆகக் காட்டப்பட்டுள்ளார். அவரே எழுதிய “ரிபப்ளிக்” என்ற நூலில் “தத்துவஞானி மன்னர்” என்ற கருத்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரசியலில் அமெச்சூர்களுக்கு எந்த இடமுமில்லை எனக் குறிக்கப் படுகிறது. ஏனென்றால், அரசாங்கம் என்பது ஒரு நுட்பக் கலையாகும், மற்றும் கட்டிடக் கலை, கப்பல் கட்டும் கலை, போன்ற மற்ற ஏனைய கைவினைகளைப் போலவே, “அரசியலும் நிபுணத்துவ அறிவை சார்ந்து இருக்கின்றது என்ற அடிப்படையில் எழுதப்பட்டது தான் “ரிபப்ளிக்” நூலாகும். அதனால்தான் அந்த நூலில் அமெச்சூர்களுக்கு அரசியலில் இடம் இல்லை என்ற கருத்தை பிளேட்டோ வலியுறுத்தியிருக்கிறார்.”



சாக்ரடீஸ்

சாக்ரடீஸ் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அவர் மன்னிப்பு கேட்டுக் கொண்டாலோ அல்லது நீதி மன்றத்தின் ஆணையை ஏற்று நாட்டை விட்டு வெளியேறிவிட்டாலோ மன்னிக்கப்பட்டிருக்கக் கூடும். மானம் கருதி, அந்தக் கொள்கை உறுதியாளர் தமது வாய்மையையும், வலிமையையும், வாதத் திறமையையும் நம்பி நீதிமன்றத்தைச் சந்தித்தார்.

நீதி மன்றத்தில் அவர் ஆற்றிய உரையையும், நீதி மன்றம் செல்வதற்கு முன்பிருந்த அவரது குடும்பத்தின் நிலையையும் விளக்கிவிட்டு, பிறகு என்னுடன் உங்களையும் நீதிமன்றத்தில் சாக்ரடீசைச் சந்திக்க அழைத்துச் செல்கிறேன்.

நீதி மன்றம் செல்வதற்கு முன்பு அவருடைய வீட்டில் வழக்கமாக நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சி இதோ :-

**காட்சி - 1**

சாக்ரடீசின் வீட்டு வாயில்

(தெருவில் மக்கள் அங்குமிங்கும் போய்க் கொண்டிருக்கிறார்கள். சாக்ரடீஸ் சப்தமிட்டு அவர்களை அழைக்கிறான்.)

**சாக்ரடீஸ் :-** ஏற்றமிகு ஏதென்சு நகரத்து எழில் மிக்க வாலிபர்களே! நாற்றமெடுத்த சமுதாயத்தில் நறுமணம் கமழ்விக்க - இதோ சாக்ரடீஸ் அழைக்கிறேன்! ஓடி வாருங்கள்! பச்சை ரத்தம் பாய்ந்தோடக் கச்சைக் கட்டிக் களம் செல்லும் காளையரே! உங்களைத் தான் கூவி அழைக்கிறேன்.... கூட்டம் கூட்டமாகச் சூழ்ந்து வாருங்கள்! வீரம் விலைபோகாது, விவேகம் துணைக்கு வராவிட்டால்! தீட்டிய வாளும், தினவெடுத்த தோள்களிலே தூக்கிய ஈட்டியும் மாத்திரம் போதாது தீரர்களே! இதோ நான் தரும் ஆயுதத்தை எடுத்துக்கொள்ளுங்கள்! அறிவாயுதம்! அறிவாயுதம்! இருட்டு மேனியும் குருட்டு மதியும் கொண்ட மடமைப் பைசாசத்தை ஒரே நொடியில் ஒழித்துக் கட்டும் புதிய போர்க் கருவி! புலி நிகர் இளைஞர்களே! என்னோடு புறப்படுங்கள்! பகைவன் நம் நாட்டுக்குள்ளே புகுந்து விட்டான் - படை எதுவுமின்றி!.... பாமரரின் உள்ளத்தைக் கொள்ளை அடித்துவிட்டான்.... அறியாமை அந்தகாரத்திலே ஏதென்சு நகரத்தை மூழ்கடித்துவிட்டான், மூட நம்பிக்கை எனும் அந்தப் பகைவன்! எழில் மிகுந்த

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - டிச.17 அன்று - தலைமையேற்று நடத்துகிறார்!

# சேலத்தில் - தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் - மாநாட்டு நிறைவுப் பேருரையாற்றுகிறார்!

**சேலம், டிச. 2-**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றும், முன்னின்றும் நடத்தும், “தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு” மாநில உரிமை மீட்பு முழக்க மாநாடாக, டிசம்பர் 17, (2023) ஞாயிற்றுக்கிழமை அன்று சேலம் - பெத்தநாயக்கன் பாளையத்தில் எழுச்சியும் உணர்ச்சியும் நிறைந்ததாக மிகப் பிரம்மாண்டமாக நடைபெறுகிறது.**

**‘இளைஞர் அணி’ எனும் கழகத்தின் ஈடு இணையற்ற அமைப்பை, ஊன் உறக்கம் மறந்து, இத்துணை ஆண்டுகளாய் தம் தோளில் சுமந்து, அதன் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும், அசைவிலும் தமது பேருழைப்பைச் சிந்தி நெறிப்படுத்தி வளர்த்தெடுத்த**



**கழகத் தலைவர் -முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டு நிறைவுப் பேருரையாற்றுகிறார்! இளைஞர் அணி எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகளுக்கு வியூகங்கள் வகுத்தளிக்கிறார்.**

**முன்னதாக கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்புரையும் - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் வாழ்த்துரையும் - கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள், ‘மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்’ உரையும் நிகழ்த்துகிறார்கள். கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கழகக் கொடியேற்றி வைக்கிறார்.**

**முன்னதாக மாநாட்டில் பல்வேறு சிறப்புக்குரிய தலைப்புகளில் கழக முன்னோடிகளும், கழகத்தின்பால் பேரன்பு கொண்ட பெருமக்களும் சீர்மிகு உரையாற்றுகிறார்கள்.**

**மாலையில் - நாடு போற்றும் நல்ல பல தீர்மானங்கள் வடித்தெடுத்தல், மாநாட்டு மலர் வெளியீடு, பாசறை நூல்கள் வெளியீடு, கழக முன்னோடிகளுக்கு மரியாதை, இசை நிகழ்ச்சி என, கருத்துக்கு விருந்தளிக்கும் பல்வேறு நிகழ்வுகளின் படையலாக, மாநாட்டு நிகழ்ச்சி நிரலை செம்மையுற வகுத்துள்ளார், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்!**

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### திராவிடர் கழகத் தலைவர்

## ஆசிரியர் கி.வீரமணி 91வது பிறந்தநாள்!

### ‘முரசொலி’ வாழ்த்தி மகிழ்கிறது!



திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் தடம்மாறாத் தளகர்த்தராக, தந்தை பெரியார் அவர்களின் கொள்கை முழக்கமாக இன்றும் மக்களிடையே கொண்டு சேர்த்துக்கொண்டிருப்பவர்.

திராவிட இயக்க கொள்கை வழியில் இன்றும் நடைபோட்டுக்கொண்டிருக்கும் ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு இன்று (02.12.2023) 91-வது பிறந்தநாள்!

அவரது பிறந்தநாளில் அவரை வாழ்த்தி மகிழ்கிறது முரசொலி!.

– ஆசிரியர்

முரசொலி

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 02-12-2023

# அயோத்திதாசரைப் போற்றிய திராவிட இயக்கம் !

“என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடி அயோத்திதாசப் பண்டிதர்தான்” என்று பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களால் போற்றப்பட்ட பேரொளியாம் அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு சென்னை கிண்டியில் மணிமண்டபம் அமைத்து அதனைத்திறந்து வைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

★ “தமிழ்நாட்டு அரசியலில் - தமிழன், திராவிடன் ஆகிய இரண்டு சொற்களையும் அடையாளச் சொல்லாக மாற்றியவர் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள்.

வள்ளுவர் - அவ்வை - கபிலர் - வள்ளலார் - வரிசையிலே தமிழ்ச் சிந்தனை மரபை வளர்த்தெடுத்த மாபெரும் ஆளுமையான அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பெருமையைப் போற்றக்கூடிய அளவில் சென்னையில் அவரது திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும்” என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கடந்த 3.9.2021 அன்று அறிவித்தார் முதலமைச்சர் அவர்கள். அயோத்திதாசப் பண்டிதர் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டு அது நேற்றைய தினம் (1.12.2023) முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆரியர் எதிர்ப்பு - பார்ப்பனர் மறுப்பு - சாதி பேதம் - பெண்ணுரிமை - தமிழ்ப் பற்று - இடஒதுக்கீடு - பௌத்தம் - தமிழ்ப் பண்பாடு - ஆகியவை குறித்து காலனியாதிக்கக் காலத்திலேயே எழுதியும் - கோரிக்கை வைத்தும் - இதழ் நடத்தியும் போராடி வந்தவர் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள். அதனால்தான் தனது முன்னோடியாக அயோத்திதாசப் பண்டிதரை தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள்.

“என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடியாக இருப்பவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும், தங்கவயல் ஜி.அப்பாத்துரையாரும்தான்” என்று பெங்களூரில் பேசியவர் தந்தை பெரியார். அயோத்திதாசருக்குப் பிறகு ‘தமிழன்’ இதழை நடத்தியவர் தான் அப்பாத்துரையார். அவருக்கும் பெரியாருக்கும் நெருக்கமான நட்பு இருந்தது. பெங்களூருக்கு பெரியாரை அழைத்து மாநாடுகளில் பேச வைத்துள்ளார் அப்பாத்துரையார்.

‘தமிழன்’ இதழை 1907 முதல் 1914 வரை நடத்தினார் அயோத்திதாசப் பண்டிதர். அவருக்குப் பிறகு 1926 ஆம் ஆண்டு மீண்டும் அந்த இதழ் வெளியானது. அதனை வரவேற்று தனது ‘குடிஅரசு’ இதழில் பெரியார் எழுதி இருக்கிறார். சுயமரியாதை இயக்கத்தின் செய்திகளை அதிகம் வெளியிடும் இதழாக பிற்காலத் ‘தமிழன்’ இதழ் அமைந்தது. எனவே திராவிட இயக்க எழுத்தாளர்கள் தொடர்ச்சியாக அயோத்திதாசரைக் குறிப்பிட்டு எழுதுவதை வழக்கமாக வைத்திருந்தார்கள். ‘உண்மை’, ‘விடுதலை’ ஆகிய இரண்டு இதழ்களிலும் அயோத்திதாசர் பற்றிய கட்டுரைகள் வெளியாகின. திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள், 1993 ஆம் ஆண்டு ‘களத்தில் நின்ற காவலர்கள்’ என்ற நூலை எழுதினார். இதில் அயோத்திதாசர் வரலாறு முழுமையாகச் சொல்லப்பட்டது. பெரியாரிய ஆய்வாளர்கள் எஸ்.வி. ராஜதுரை - வ.கீதா ஆகிய இருவரும் இணைந்து Towards a non brahmin millennium : From Iyothee Thase to periyar என்ற நூலை 1998 ஆம் ஆண்டு வெளியிட்டார். 1999 ஆம் ஆண்டுதான் ஞான.அலாசியஸ் தொகுத்த அயோத்திதாசப் பண்டிதர் சிந்தனைகள் புத்தகம் வெளியானது. இதன் பிறகு அவர் அதிகம் பேசப்பட்டார்.

அறிவுச்சூழலில் அதிகம் பேசப்படத் தொடங்கிய அயோத்திதாசப் பண்டிதருக்கான அரசு அங்கீகாரத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து வழங்கி வந்தது.

★ 1999 ஆம் ஆண்டு ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த தலித் எழில்மலை அவர்கள், தாம்பரத்தில் சித்த மருத்துவ நிலையம் அமைக்க அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் இடம் கேட்டார். ‘நீங்கள் இடம் கொடுத்தால் அயோத்திதாசர் பெயரால் அந்த மருத்துவ நிலையத்தை அமைக்க முடியும்’ என்று அமைச்சர் தலித் எழில்மலை சொன்னார். அந்தப் பெயருக்காகவே இடம் தருவதாகச் சொல்லி 12 ஏக்கர் நிலத்தை இலவசமாக வழங்கினார் முதலமைச்சர் கலைஞர். 2005 ஆம் ஆண்டு பிரதமர் மன்மோகன்சிங் அதனைத் திறந்து வைத்தார்.

★ மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சராக தயாநிதி மாறன் இருந்தபோது, அயோத்திதாசரின் தபால் தலை வெளியிடும் முயற்சிகளுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார். 21.10.2005 அன்று சென்னையில் அயோத்திதாசர் தபால் தலை வெளியீட்டு விழா நடந்தது. தலைவர் கலைஞர் பங்கெடுத்தார். **‘தமிழ்த் தேசிய உணர்வின் முன்னோடி’** என்று அயோத்திதாசரை அழைத்தார் கலைஞர்.

★ 2007-08 நிதி நிலை அறிக்கையில், அயோத்திதாசரின் ‘ஒரு பைசா தமிழன்’ இதழின் நூற்றாண்டு விழாவை அரசு கொண்டாடும் என தி.மு.க. அரசு அறிவித்தது.

★ அயோத்திதாசப் பண்டிதரால் தொடங்கப்பட்ட ‘ஒரு பைசா தமிழன்’ இதழின் நூற்றாண்டு விழாவை தி.மு.க. அரசு 8.7.2008 அன்று சென்னையில் நடத்தியது. மாண்புமிகு அமைச்சர்கள் இனமானப் பேராசிரியர் அன்பழகன், பரிதி இளம்வழுதி, தமிழரசி ஆகியோர் பங்கெடுத்த இந்த விழாவில் - சென்னை மாநகர மேயர் மா.சுப்பிரமணியன், கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்களான ஆர்.நல்லகண்ணு, ஜி.ராமகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்களான யசோதா, ரவிக்குமார் மற்றும் பேராசிரியர் பெரியார் தாசன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

**★2008-09 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அயோத்திதாசப் பண்டிதரின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. அவரது குடும்பத்தினருக்கு 10 லட்சம் ரூபாய் வழங்கியது தி.மு.க. அரசு.**

**★ இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அயோத்திதாசப் பண்டிதருக்கு சென்னையில் அவர் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்துள்ளார்.**

**★ ஆதி திராவிடர் குடியிருப்புகளை மேம்படுத்த “அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்” வரும் ஐந்தாண்டுகளில் 1000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது என்ற அறிவிப்பையும் திராவிட மாடல் அரசு செய்துள்ளது.**

- இப்படி அயோத்திதாசப் பண்டிதரின் புகழைப் பரப்புவதில் திராவிட இயக்கமும், தி.மு.க. அரசும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இருந்துள்ளதை திறந்த மனத்தோடு இருப்பவர்கள் நன்கு உணரலாம். தொண்டையில் ‘முள்’ அடைத்திருந்தால் உணர முடியாது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள திராவிடப் பேரொளி அயோத்திதாச பண்டிதர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைகோ, தொல்.திருமாவளவன், ஆ.ராசா, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், ரவிகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் கே.எம். காதர் மொஹிதீன், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தர மோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.12.2023) முகாம் அலுவலகத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு மாநில உரிமை மீட்பு முழக்கமாக சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதியன்று நடைபெறவுள்ளதையொட்டி அம்மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றார். உடன் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.



கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்களை நேற்று (1.12.2023) அவரது இல்லத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு மாநில உரிமை மீட்பு முழக்கமாக சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதியன்று நடைபெறவுள்ளதையொட்டி அம்மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றார். உடன் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

### கனமழை எச்சரிக்கை: அரசு நிர்வாகத்துடன் இணைந்து

# கழக அனைத்து நிர்வாகிகள் நிவாரணப் பணிகளை மேற்கொள்வீர்!

### அமைச்சர்கள் - நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் - உள்ளாட்சிப் பிரதிநிதிகள் - கழக நிர்வாகிகளுக்கு

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, டிச.2-

கனமழை எதிரொலி: அமைச்சர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகளுக்கும் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோள் வருமாறு :-

இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் டிசம்பர் 2ஆம் தேதி முதல் டிசம்பர் 4 ஆம் தேதி வரை பல மாவட்டங்களில் மழை / கனமழை பெய்யும் என எச்சரிக்கை வெளியிட்டிருப்பதால் அரசு நிர்வாகம் முழுவீச்சில் முடுக்கி விடப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

அரசு அதிகாரிகளின் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அமைச்சர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக அமைப்புகளில் உள்ள அனைத்து நிர்வாகிகள் தத்தமது பகுதிகளில் இருந்து மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை செய்திட உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மக்களுக்கான உணவு, உடை, மருத்துவ வசதி உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கு உதவிடும் வகையில் அரசு அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் தேவையான உதவிகளையும் செய்து ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

### முதல்வர் தலைமையில் நடைபெற இருந்த

# மாற்றுத் திறனாளிகள் தினவிழா ஒத்திவைப்பு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.2-

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இன்று (டிசம்பர் 2ஆம் தேதி) நடைபெற இருந்த உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா வானது புயல் / கனமழை எச்சரிக்கை காரணத்தினால் ஒத்தி வைக்கப்படுகிறது.

உலக மாற்றுத்திறனாளிகள் தினம், ஆண்டுதோறும் டிசம்பர் மூன்றாம் நாள் அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு, டிசம்பர் இரண்டாம் தேதி காலை 10.30 மணியளவில், சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா / விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கும் விழா / மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற இருந்தது. தற்போது, இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் டிசம்பர் 2 முதல் டிசம்பர் 4-ஆம் தேதி வரை சென்னையில் புயல் / கனமழை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன் காரணமாக, இன்று (டிசம்பர் 2ஆம் தேதி) முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற இருந்த உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா நிகழ்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது. இவ்விழா நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (10)

# சாக்ரடீஸ் சாகாத சரித்திரம்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

ஏதென்சு அறிவுப் பொழிலாக மாற, ஆற்றல் நிறை தோழர்களே, அணிவகுத்துப் புறப்படுங்கள்!

(வாலிபர்கள், போர் வீரர்கள் சூழ்ந்து நின்று சாக்ரடீசின் உபதேசத்தைக் கேட்கின்றனர். சாக்ரடீசின் மனைவி எக்ஸேந்திபி என்பவள் கணவனின் போக்கிலே கசப்புக் கொண்டு வீட்டு வாயிற்படியிலிருந்தபடியே வெறுப்புடன் பார்த்து நிற்கிறாள்...... சாக்ரடீசின் நண்பன், வயதான தோழன் கிரிட்டோ வருகிறான். அவனைக் கண்டதும்.....)

**சாக்ரடீஸ் :-** கிரிட்டோ! வந்து விட்டாயா? வா, வா!.... இதோ வயதான காலத்திலே வாலிபர்களை நல்வழிக்கு அழைத்துச் செல்லும் கடமையிலே விரைந்து நடக்கிறேன் நான்!....... எனக்கு வாய்த்த இளம் மனைவி, இரண்டாம் தாரம்.....எக்ஸேந்திபி, எத்துணை ஆத்திரத்தோடு என்னைத் தடுக்கிறாள் பார்! பார்! பார்! அவள் கனல் பொழியும் விழிகளைப் பார்! விழிகளா அவைகள்?..... பயங்கரமான மின்னலப்பா! மின்னல்!........

எக்ஸேந்திபி :- (கோபமாக) ஆமாம்; மின்னல்தான் .......இந்தக் கிண்ணாரக் கிழவருக்கு மனைவியின் கண்கள் மின்னலாகத்தான் தெரியும்.....!

**சாக்ரடீஸ் :-** என் செய்வது....? நானோர் கற்பனைக் கவியாக இருந்தால், உன் பருத்த இடையைப் பார்த்து ஆகா, மின்னல் இடை என்பேன்!.... கிரிட்டோ.....சாக்ரடீஸ்தான் பொய் சொல்ல மாட்டானே; உண்மை சொல்கிறேன்..... மின்னலின் ஒளியை என் மனைவியின் கண்களில் காண்பதால்! ....... இல்லையா நண்பா.... !

**எக்ஸேந்திபி :-** போதும்! போதும்! ..... வீதியில் போகிறவர் வருகிறவர்களோடு இருக்கட்டும், உமது விவாதங்களும், விளக்கங்களும், விளக்கெண்ணெய்த் தத்துவங்களும்! உமது முதல் மனைவி மிர்டோ, அவளைப் பிடித்த நல்ல காலம் செத்து விட்டாள்! நானிருக்கிறேன் இப்படிக் கஷ்டப்பட..... குடும்பம்! குடும்பத்திலே மனைவி - மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற கவலை வேண்டாமா மனிதனுக்கு?

**சாக்ரடீஸ் :-** (சூழ்ந்துள்ள இளைஞர்களைக் காட்டி.....) இதோ, இந்தப் பிள்ளைகளுக்கும் சேர்த்துத்தான் நான் பாடுபடுகிறேன்..... அன்புள்ளவளே! சூரியன், பூமிக்கும் அதைச் சுற்றியிருக்கும் கடலுக்கும், அவைகளிலே வாழுகின்ற எல்லா உயிர்களுக்கும் கடமையைச் செய்து வருகிறான்!.....

எக்ஸேந்திபி :- இப்படி விண்ணைப் பற்றியும் மண்ணைப் பற்றியும் பேசிக் கொண்டு, உம்மை நம்பிவந்த பெண்ணை நட்டாற்றில் விட்டு விடும்.. (தனக்குத் தானே கோபமாக) அடி, எக்ஸேந்திபி உனக்கு ஏண்டி இந்தவம்பு!..

எப்படியாவது கெட்டுத் தொலை! .... ஒழிந்து போ! .... இந்தத் தரித்திரம் பிடித்த வீட்டை விடச் சுடுகாடு எவ்வளவோ மேல்! . . . இந்தத் தர்க்கவாதியை கட்டிக் கொண்டு அழுவதை விடக் கழுத்தில் ஒரு சுருக்குக் கயிற்றைக் கட்டிக் கொண்டு சாகலாம்! சாகலாம்! சாகலாம்!....

(பேரிரைச்சல் போட்டபடி உள்ளே போகிறாள். அவள் போனதும் சாக்ரடீஸ் சிரித்துக் கொண்டே, மற்றவர்களைப் பார்த்து.....)

**சாக்ரடீஸ் :-** அப்பாடா, இடி இடித்து ஓய்ந்தது.... மின்னல் வரும்போதே தெரியும், இப்படி இடி இடிக்கும் என்று!..... இளைஞர்களே!.... இலட்சியவாதி களுக்கு இப்படி எத்தனையோ இடையூறுகள்!... வீட்டிலே இது போல்! நாட்டிலோ, கேட்கத் தரமில்லை! அரசியல்வாதி அனிடஸ் தன் அக்கிரமங்களைச் சுட்டிக்காட்டும் சூழ்நிலை எதுவுமே முளைக்கக் கூடாது எனக் கருதுகிறான். கற்பனை உலகத்தைச் சிருஷ்டித்துக் களிப்படையும் மெலிடஸ்! கற்களிலே, உலோகங்களிலே சிலைகளை வடித்துக் காட்டிச் சிறப்படையும் லைகன் இவர்களெல்லாம் எனது அறிவுப் பிரச்சாரத்தால் அஸ்திவாரமே ஆட்டம் கொடுக்கிறதென ஆத்திரப்படுகிறார்கள்.... கிரேக்கத்தின் கீர்த்தி, புவனமறியாததல்ல! அதற்காக இங்கு விழுந்திருக்கும் கீறல்களை மறைத்திட முயல்வது, புண்ணுக்குப் புனுகு தடவும் வேலையைப்போன்றது!...... அதனால்தான் தோழர்களே! சிந்திக்கக் கற்றுக் கொள்ளுங்கள் என சிரந்தாழ்த்தி உங்களை அழைக்கிறேன். அறிவு! அகிலத்தின் எந்த மூலையிலிருந்தாலும் அதைத் தேடிப் பெறுவதற்காக உங்களை அழைக்கிறேன்!... “உன்னையே நீ அறிவாய்!” இந்த உபதேசத்தின் உண்மையை உணர்வதற்காக என் உயிரினுமினியவர்களே! உங்களை எல்லாம் அழைக்கிறேன்....

(அப்போது எக்ஸேந்திபி ஒரு பாத்திரத்திலே தண்ணீரைக் கொண்டு வந்து, சாக்ரடீசின் தலையில் கொட்டுகிறாள்)

**கிரிட்டோ :-** ஆ! என்ன இது? என்ன இது?....

**சாக்ரடீஸ் :-** பதறாதே கிரிட்டோ! .... ஒன்றுமில்லை! . . . முதலில் மின்னல் கண்டாய்; பிறகு இடி இடித்தது, மழையும் பெய்கிறது... அவ்வளவுதான்!...

(இளைஞர்களும் கிரிட்டோவும் சிரிக்கிறார்கள். எக்ஸேந்திபி கோபத்தோடு உள்ளே போகிறாள்.)

**காட்சி - 2**

(அனிடஸ், மெலிடஸ், லைகன் மூவரும் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருக்கிறார்கள்)

**அனிடஸ் :-** குமுறும் எரிமலை! கொந்தளிக்கும் கடல்! இவைகளை விடப் பயங்கரமானவன்

**சாக்ரடீஸ்!** . . . . . அறிவாயுதமாம்... அனைத்துலகும் அடி பணியும் அஸ்திரமாம்!...... அந்த ஆயுதம் கிரேக்கத்தில் தயாராகுமானால், நாம் தலை தூக்கவே முடியாது மெலிடஸ்! என்ன சொல்கிறாய், லைகன்?

**லைகன் :-** நான் கல்லுக்குக் கடவுள் உருவம் தரும் சிற்பி!... ஒரு காலத்திலே இந்தச் சாக்ரடீசும் என்னைப் போலச் சிற்பிதான்! ... இப்போதோ அவன் சிந்தனைச் சிற்பியாக மாறிவிட்டான். . . பரவாயில்லை. கல்லைக் கடவுளாக்கும், நானும் கற்பனை மூட்டைகளுக்குத் தெய்வீக மெருகு தரும் கவிஞனாம் மெலிடசும், அரசியல் நிபுணனாம் நீயும் ஒன்று சேர்ந்து விட்ட பிறகு.... சாக்ரடீஸ் - சமுத்திரத்துத் துரும்புதானே, அனிடஸ்...!

**மெலிடஸ் :-** சபாஷ் லைகன், சபாஷ்.... ! பொது மக்கள் கழுதைகளாயிருந்தால் தான் நாம் தூக்கி வைக்கும் பொய் மூட்டைகளைச் சுமப்பார்கள்! குருடர்களாய் இருந்தால்தான் நாம் காட்டுகிற வழியிலே நடப்பார்கள்! நாம் கீறிய கோட்டைத் தாண்டாத கிரேக்க மக்களுக்கு அந்தக் கிழவன் அறிவுக் கண் வழங்குவதற்குள் அவனை நாம் அழித்துவிட வேண்டும் ....

(மூவரும் ஒரு முடிவோடு புறப்படுகிறார்கள்)

**காட்சி - 3**

(சந்தை வெளியிலே சாக்ரடீஸ் பேசிக் கொண்டிருக்கிறான்)

**சாக் :-** சந்தையிலே பொருள் வாங்கும்.... விந்தை மனிதர்காள்! அங்கெல்லாம் கிடைக்காத அரும் பொருள், நானொன்று வைத்திருக்கிறேன். விலை மதிக்கவொண்ணா வைரம்!.... ஆராய்ச்சி என்னும் ஆழ்கடலில் குளித்தெடுக்கும் ஒளி முத்து! அங்காடிக் கடையிலே அகப்படாத பொருள்! அறிவு! அறிவு! இந்த அதிமதுரப் பொருளை வாங்க வாரீர்! வாரீர்!

(கிரேக்கத்துச் சிப்பாய் வருகிறான்)

**சிப்பாய் :-** நிறுத்து உன் பிரசங்கத்தை!. ...

**சாக் :-** நான் நிறுத்தினாலும் அதைத் தொடர்ந்து நடத்த என் தோழர்கள் பலர் இருக்கிறார்களே!

**சிப்பாய் :-** தெகிடுதத்தம் பேசாதே! நீ வாலிபர்களைக் கெடுக்கிறாய்! நடுத் தெருவில் பைத்தியம் போல் புலம்புகிறாய்!

**சாக் :-** உன்னை, என்னிடம் அனுப்பியவர்களிடம் போய்ச் சொல்..... ஆடு மேய்ந்து அழிந்து விடும் அருகம்புல் அல்ல, புத்துலகு சமைப்போரின் போதனை என்பதை! கருத்தொளி காட்டுக் குதிரையல்ல தம்பி, அதிகாரக் கடிவாளமிட்டதும் அடங்கி ஒடுங்கி விட! . . . .

**சிப்பாய் :-** அதிகப் பிரசங்கியாரே! உமது பேச்சை நாளை நீதி மன்றம் கேட்கட்டும்! வாரும் என்னோடு, இப்போது!

(இழுக்கிறான், சாக்ரடீசை)

கிரி : இது என்ன அக்கிரமம்! எங்கு இழுத்துச் செல்கிறாய், தள்ளாத வயதில் ..... எங்கள் அறிவுத் தங்கத்தை.... விடு வீரனே, விடு!.....

**சாக்:-** வேண்டாம் நண்பனே, வேண்டாம்....! நான் எங்கே போகிறேன்? நீதி மன்றத்திற்குத் தானே! கொலைக் களத்திற்கு அல்லவே!... என்னைப் போகவிடு! கருத்திலே தெளிவும், கொள்கையிலே வலிவும் இருக்கும் வரை விசாரணைக்கும், வழக்கிற்கும் விவேகிகள் பயப்படத் தேவையில்லை. போகிறேன். அறிவுப் பாதை காட்டுவோரை அழிவுப் பாதைக்கு விரட்டும் அநியாயக்காரர்களை நேரடியாகச் சந்தித்துப் போர் தொடுக்கப் போகிறேன்.

(சிப்பாய், சாக்ரடீசை இழுத்துச் செல்கிறான்)

**காட்சி - 4**

நீதிமன்றம் (ஐநூறு பேர் கொண்ட ஏதேனிய நீதிமன்றம் கூடியிருக்கிறது. மரத்தினால் செய்யப்பட்ட பெஞ்சுகளில் நீதிபதிகள் அமர்ந்திருக்கிறார்கள். ஒரு சில பலகைகள் பாயினால் மூடப்பட்டிருக்கின்றன. நீதிபதிகளையும் பொது மக்களையும் இடையிலே அமைக்கப்பட்டுள்ள சிறு சிறு கம்புகள் பிரிக்கின்றன. மன்றத்தின் வலது புறத்திலே நீதிமன்றத் தலைவரின் ஆசனம் இருக்கிறது. அதன் பக்கத்திலே ஒரு ஆசனம்.

அதில்தான் இரண்டு கட்சிக்காரர்களும் பேசவேண்டிய போது வந்து பேச வேண்டும். இடது புறத்தில் தனித்தனியே உள்ள இரண்டு ஆசனங்களில் கட்சிக்காரர்களும் - அவர்களின் சாட்சிகளும் காட்சி தருகிறார்கள். ‘Hedge Log’ என்ற பெட்டியிலேயுள்ள முத்திரை உடைக்கப்பட்டு, குற்றப் பத்திரிகைகள் கொட்டப்படுகின்றன. குற்றப் பத்திரிகைகளைக் குமாஸ்தா படிக்கிறான்.)

“பித்தன்ஸ்பேட்டைச் சேர்ந்த மெலிடியசின் குமாரன் மெலிடியஸ், அலோபீகில் உள்ள சோபரன்னிஸ்கோவின் குமாரன் சாக்ரடீஸ் மீது பின்வருமாறு குற்றம் சாட்டுகிறான். இந்த நாடும், இந்த அரசாங்கமும் ஒத்துக்கொண்ட கடவுள்களை, சாக்ரடீஸ் ஒத்துக் கொள்வதில்லை. இளைஞர்களை உபதேசம் செய்து கெடுக்க முயலுகிறான். கெடுத்தும் வருகிறான். அவனுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டும்”.

(அனிடஸ், லைகன் இருவரும் மெலிடசைப் போலவே சாக்ரடீஸ் மீது குற்றம் சுமத்துகிறார்கள்)

**அனி :-** சாக்ரடீஸ்!.... நாட்டில் நடமாடக் கூடாத ஓர் ஆத்மா!.... ஜனநாயக அரசாங்கத்தைக் குறை கூறும் அந்த ஜந்து, உடல் முழுவதும் விஷம் கொண்டது. . . . கேட்டாரைப் பிணிக்கும் சொற்களால் - கேளாரும் வேட்ப மொழியும் வார்த்தைகளால் - கேடு மலியும் கருத்துக்களை அள்ளி வழங்கி, அரசாங்கத்திற்கு விரோதமாக, சட்டத்திற்கு விரோதமாக இளைஞர்களைத் தூண்டி விடும் இழிகுணக் கிழவன்!

(சாக்ரடீஸ் சிரிக்கிறான், கலகல வென்று)

**நீதி மன்றத் தலைவர் :-** என்ன சிரிப்பு? என்ன காரணம்?

**சாக் :-** ஒன்றுமில்லை, தலைவ!... ஆத்திரத்திலே அனிடஸ் ...... தன்னை மறந்து என்னைப் பார்த்துக் கிழவன் எனக் கேலி புரிகிறார். அதை நினைத்தேன் ..... சிரித்தேன்! கடல் நுரை போல் நரை விழுந்து விட்ட தலை, எனக்கும் -அனிடசுக்கும்! ..... இல்லையா, சபையோர்களே! என்ன அனிடஸ், உண்மை தானே?

**மெலி :-** சாக்ரடீஸ்!. . . வழக்கும் விசாரணையும் உங்கள் இருவரின் தலையைப் பற்றி அல்ல! . . . அதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

**சாக் :-** மிகவும் நன்றி, மெலிடஸ்! ஆனால் ஒன்று! எண்சாண் உடம்பிற்குத் தலையே பிரதானம் போல்..... இந்த வழக்கிற்கும் தலையே பிரதானம்! என் தலையிலேயிருந்து சுடர் விட்டுக் கிளம்பும் அறிவு - அதை அழிக்க உன் தலையிலேயிருந்து புறப்படும் அர்த்தமற்றக் கற்பனைகள் - அனிடசின் தலையிலேயிருந்து பீறிட்டெழும் அரசியல் ஆணவம் - இந்த மூன்றுக்கு மிடையே நடைபெறும் மும்முனைப் போராட்டம் - அதன் விளைவுதான் மெலிடஸ், இந்த வழக்கு!

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 17.11.2007)

---

சேலம் இளைஞர்அணி மாநில மாநாட்டிற்கு கழக அடலேறுகளைத் திரட்ட திண்டுக்கல் வருகை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு கருக்காம்பட்டியில் மாபெரும் வரவேற்பு!

### திண்டுக்கல் மாவட்டக் கழகத்தினருக்கு - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திண்டுக்கல், டிச.2-

திண்டுக்கல் செயல் வீரர்கள் கூட்டத்துக்கு வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் கருக்காம்பட்டியில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்றிடுமாறு மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவர்களின் அறிக்கை வருமாறு:-

சேலத்தில் டிசம்பர் 17ஆம் நாள் நடைபெறவிருக்கும் 2வது இளைஞர்அணி மாநாட்டில் கலந்துகொள்வதற்கு கழகத் தோழர்களைஅழைக்கவும், இளைஞர்அணி தோழர்களுக்குதந்தைபெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர்கலைஞர்ஆகியோரின் தத்துவங்களைதமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் அடுத்த தலை முறைக்கு கொண்டுசெல்லும் மாபெரும் பொறுப்பைதனது நெஞ்சங்களில் ஏற்றிக்கொண்டு அடுத்ததலை முறைக்கு கொண்டு செல்லுகிறசெயல் வீரர்கள் கூட்டம் 04.12.2023, திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் திண்டுக்கல், அஞ்சலிரவுண்டானா, அங்குவிலாஸ் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட





இளைஞர்அணிதம்பிகளோடு கலந்து பேச வருகை தரும் நீட் தேர்வு விலக்கிற்காக போராடும் இளம் தலைவர், சமூகநீதிக்காக கர்ஜிக்கும் திராவிடப் போராளி, மாநில உரிமைகளை மீட்கவந்தசுடரொளி, நாளும் பொழுதும் மக்கள் நலம் காக்கஉழைக்கும் திராவிட கொள்கையின் அச்சடிப்பு, இளைஞர்அணியின் உச்சரிப்பு, இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும் கழக இளைஞர்அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வேடசந்தூர் ஒன்றியம், கருக்காம்பட்டியில் 03.12.2023, ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில் சிறப்பான வர வேற்பு அளிக்கப்படவுள்ளது.

எனவே, இந்த வரவேற்பு நிகழ்வில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், கிளை மற்றும் வார்டுகழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டபிரதி நிதிகள், அனைத்துமாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பா ளர்கள், மாநகராட்சிமேயர், துணை மேயர்மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர், துணைத் தலைவர்மற்றும் மாவட்டஊராட்சி குழு உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணை பெருந்தலைவர்கள் மற்றும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சிமன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சிமன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், முன்னாள் உள்ளாட்சிபிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் ஏராளமாக கலந்துகொண்டு சிறப்பான தொரு வரவேற்பினை வழங்கிடவேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

---

தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (7)

டிசம்பர் 3 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை யொட்டி, 2023 ஜூன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, டிசம்பர் 3 ஞாயிற்றுக்கிழமை அன்று முரசொலி சிறப்பிதழ், “கல்வியாளர்கள் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

# பொதுச் செயலாளர் துரைமுருகன் சிறப்புரை! பொருளாளர் டி.ஆர்.பாலு வாழ்த்துரை! முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு - மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் உரை! கனிமொழி கருணாநிதி எம்.பி. கொடியேற்றுகிறார்!

# சிறப்பு தலைப்புகளில் சொற்பொழிவரங்கம்! நாடு போற்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது!

## சேலம் இளைஞரணி மாநாடு முதல் பக்கத் தொடர்ச்சி

**தமிழ்நாட்டு வரலாற்றில் புது சரிதம் படைக்க வுள்ள இம்மாநாட்டில் தமிழ்கூறு நல்லுலகெங்கணு மிருந்து இலட்சோப லட்சமென இளைஞர் படை திர ளுகிறது!**

இம்மாநாடு பற்றிய விபரம் வருமாறு:-

"தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு" டிசம்பர் 17- ஞாயிற்றுக்கிழமை அன்று சேலம் - பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறு கிறது.

மாநாட்டுப் பந்தலுக்கு - 'தந்தை பெரியார்' பெய ரில் நுழைவாயில்,

திடலுக்குப் பெயரோ, அண்ணா திடல்,

கலைஞர் அரங்கம்,

பேராசிரியர் மேடை,

வீரபாண்டியார் கொடி மேடை,

முரசொலி மாறன் புகைப்படக் கண்காட்சி,

வீரபாண்டி ஆ.ராஜா, வீரபாண்டி செழியன், சந்தி ரசேகர், 'நீட்' போராளிகள் அனிதா மற்றும் தனுஷ் ஆகியோர் பெயர்களால் தோரண வாயில்கள் என,

- மாநாட்டின் ஒவ்வொரு ஏற்பாடும் உணர்ச்சியும், பொருளும் மிக்கதாய் அமைக்கப் பெறுகிறது.

காலை 9.00 மணியளவில் கழகக் கொடியேற்ற லுடன் மாநாடு தொடங்குகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், கழகக் கொடியினை ஏற்றி வைக்கிறார்.

காலை 9.30 மணியளவில், மாநாட்டு வரவேற் புக் குழுத் தலைவர் உரை - கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல்!

**மாநாட்டுத் திறப்பாளர் உரை!**

9.45 மணியளவில் - இம்மகத்தான மாநாட்டின் தலைவராக, இளைஞர் அணிச் செயலாளர் உதய நிதி ஸ்டாலின் அவர்களை முன்மொழிதலும் வழி மொழிதலும் நடைபெறுகிறது.

காலை 10.00 மணியளவில், கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரு மான கே.என்.நேரு அவர்கள், 'மாநாட்டு ஒருங்கி ணைப்பாளர்' உரை நிகழ்த்துகிறார்.

10.15 மணியளவில் - அரசு கொறடா கோவி. செழியன், மொழிப்போர்த் தியாகிகளின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்து உரையாற்றுகிறார்.

10.30 மணியளவில், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., 'மாநாட்டுத் திறப்பாளர்' உரை நிகழ்த்துகிறார்.

இந்நிகழ்வுகளை அடுத்து காலை 11.00 மணிக்குத் தொடங்கி, மாலை 6.00 மணிவரை, உணர்ச்சி யும் எழுச்சியும் மிக்க பல்வேறு தலைப்புகளில் 'சொற்பொழிவரங்கம்' நடைபெறுகிறது.

**சிறப்புத் தலைப்புகளில் உரையாற்றுவோர் விபரம்:**

**இளைஞர் அணி கண்ட களங்கள் -**
திருச்சி என்.சிவா எம்.பி.,

**திராவிட மாடல் - எல்லோருக்கும் எல்லாம் -**
ஆ.ராசா எம்.பி.,

**நிதித்துறையில் மாநில உரிமைகள் பறிப்பு-**
அமைச்சர் தங்கம் தென்னரசு

**தமிழ்நாட்டின் கல்விப் புரட்சி -**
அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி

**மொழிப்போர் - இந்தித் திணிப்பு எதிர்ப்பு -**
கம்பம் செல்வேந்திரன்

**திராவிட இயக்க முன்னோடிகள் -**
முனைவர் சபாபதி மோகன்

**கலைஞர் பாதையில் நம் தலைவர் -**
திண்டுக்கல் ஐ.லியோனி

**மாநிலத்தில் சுயாட்சி , மத்தியில் கூட்டாட்சி -**
பேராசிரியர் சுப.வீரபாண்டியன்

**திராவிடம் சொல்லும் மனிதநேயம் -**
வழக்கறிஞர் அருள்மொழி

**தலைவர் ஆட்சியில் தொழில்புரட்சி -**
அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா

**கலைஞர் - ஒடுக்கப்பட்டோர் வாழ்வில் ஒளிவிளக்கு -**
அமைச்சர் மதிவேந்தன்

**கலைஞரின் பேனா -**
கரு பழனியப்பன்

**கழக ஆட்சியில் திறன் மேம்பாடும் வேலைவாய்ப்பும் -**
எம்.எம்.அப்துல்லா எம்.பி.,

**மருத்துவக் கட்டமைப்பு - இந்தியாவின் முன்னோடி தமிழ்நாடு -**
மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.

**இலக்கியமும் தி.மு.க.வும் -**
மனுஷ்யபுத்திரன்

**அவதூறுகளை அடித்து நொறுக்கிடும் கழகம் -**
வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா

**சமூக நீதி -**
வே.மதிமாறன்

**பத்திரிகையும் திராவிட இயக்கமும் -**
கோவி லெனின்

**நீட் விலக்கு நம் இலக்கு -**
வழக்கறிஞர் ராஜீவ் காந்தி

**பெரியாரும் பெண் விடுதலையும் -**
வழக்கறிஞர் செ.ம.மதிவதனி

**தாயுமானவர் நம் தலைவர் -**
திருமதி செ.கனிமொழி

**திருநர் வாழ்வில் திராவிட அரசு -**
முனைவர் ரியா

...

இங்ஙனம் -

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" - எனும் வள்ளுவப் பெருந்தலையின் வாக்குக் கொப்ப சொற்பொழிவ ரங்கம் நிகழ்ந்து நிறைவுறுகிறது.

மாலை 6.00 மணியளவில் - நாடு போற்றும் நல்ல பல தீர்மானங்கள், இலட்சோப லட்சம் கழக அடலேறுகளின் கரவொலி, வாழ்த்தொலியுடன் நிறைவேற்றப் பெறுகிறது.

**மாநாட்டுத் தலைவர் உரை!**

மாலை 6.30 மணியளவில், மாநாட்டுத் தலை வர் உரை!

இந்தியத் திருநாடே திரும்பிப் பார்க்கும் வண் ணம் இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை நடத்தி வாகை சூடும் - கழக இளைஞர் அணிச் செய லாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாநாட்டுத் தலைமையுரையாற்றுகிறார்.

மாநாட்டுத் தலைவர் உரையைத் தொடர்ந்து - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் வாழ்த் துரை வழங்குகிறார்.

கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

இரவு 7.30 மணியளவில், மாநாட்டின் முத்தாய்ப் பாக, கழகத் தலைவர் - 'திராவிட மாடல்' எனும் தீந் தமிழ் ஆட்சியின் நாயகர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநாட்டு நிறைவுப் பேருரையாற்றுகிறார்.

கழகத் தலைவரின் உரையை அடுத்து - சேலம் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மருத்துவர் வீரபாண்டி ஆ.பிரபு நன்றியுரையாற்று கிறார்.

இம்மாநாட்டு நிகழ்வுகளை, நிகழ்ச்சி நிரலை - தி.செந்தில்வேல், திவ்யா நாதன் ஆகியோர் தொகுத்து வழங்குகிறார்கள்.

**பல்வேறு சிறப்பு நிகழ்வுகள்!**

இம்மாநாட்டில்-மேற்கூறியநிகழ்வுகளன்னியில்,

மாநாட்டு மலர் வெளியீடு,

10 பாசறை நூல்கள் வெளியீடு,

கழக முன்னோடிகளுக்கு மரியாதை,

"நீட் விலக்கு நம் இலக்கு"

அஞ்சல் அட்டை ஒப்படைப்பு

புதுகை பூபாளம் கலைக்குழு,

பாடகர் திரு தெருக்குறள் அறிவு இசை நிகழ்ச்சி -

ஆகிய, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளுக்கும் இம்மாநாட்டில் இளைஞர் அணிச் செயலாளர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

**'உங்களில் ஒருவன்' மடலில் தலைவர் அன்பழைப்பு!**

"நெல்லையில் நடந்த இளைஞரணியின் முதலா வது மாநில மாநாட்டின்போது, புதிய ஆத்திசூடியை வழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். அதில், "கழ கம் வில்லாம் நின் அணியே கணையாம்!" என்று எழுதியிருந்தார். களத்தில் பாய்வதற்குத் தயாராக இருக்கும் கணைகளாக இளைஞரணியினர் செய லாற்றி வருகிறார்கள். அவர்களுக்குத் துணை நிற்க வும், இந்தியா திரும்பிப் பார்க்கும் வகையில் மகத் தான வெற்றி மாநாடாக அமையவும், மாநாட்டுத் தலைவர் தம்பி உதயநிதி அழைக்கிறார்.

கழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், அந் தந்த மாவட்டங்களுக்குட்பட்ட அனைத்துக் கிளைக ளிலிருந்தும் தேர்தல் களத்திற்கான வீரர்களாக உடன்பிறப்புகள் திரளட்டும்! கடல் இல்லாச் சேலம், கருப்பு - சிவப்புக் கடலினைக் காணட்டும்!"

என, 'உங்களில் ஒருவன்' மடலில், கழகத் தலை வர் அவர்கள், அண்மையில் அன்பழைப்பு விடுத்திருந்தார்கள்.

தலைவரின் இவ்வேண்டுகோளை கட்டளை யாக ஏற்று, 'வெட்டி வா என்றால் கட்டி வரும்' கழக இளைஞர் அணிச் சீயங்கள்,

தலைவரின் விழி அசைவில் பணி முடிக்கும் வீரர் படை, - தமிழ்நாடு மட்டுமல்ல; தமிழ்கூறு நல்லுலகம் எங்கெணுமிருந்து சேலம் - பெத்தநாயக்கன் பாளை யத்தில் இலட்சோப லட்சமெனத் திரளுகிறார்கள்!

கடல் இல்லாச் சேலத்தில் கருப்பு சிவப்புக் கட லாய்த் திரண்டு, தலைவரின் நெஞ்சம் நிறைகிறார்கள்!

---

கூட்டுறவு, பொதுத்துறை

# சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

சென்னை, டிச.2 -

முதலமைச்சர் அவர்க ளின் ஆணைக்கிணங்க கூட் டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர் கள், பணியாளர் களுக்கு ஊதிய உயர்வு வழங்கிட வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உத்தரவிட் டுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைக ளில் பணிபுரிந்து வரும் சுமார் 3,500 தொழிலாளர் கள் மற்றும் பணியாளர்க ளின் நலனில் அக்கரையும், கருணை உள்ளமும் கொண்ட தமிழ்நாடு முத லமைச்சர் அவர்கள், தொழி லாளர்கள் மற்றும் பணியா ளர்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் நீண்ட நாள் கோரிக்கை யினை பரிசீலனை செய்து ஊதிய உயர்வு வழங்கி உத் தரவிட்டுள்ளார்கள்.

முந்தைய ஆட்சியாளர்க ளின் 10 ஆண்டுகால திற மையற்ற, செயலற்ற நிர்வா கத்தின் காரணமாக, சர்க்கரை ஆலைகள் அழி வுப் பாதையை நோக்கி சென்று கொண்டிருந்த நிலையினை சரிசெய்யும் நோக்குடனும், சர்க்கரைத் துறையின் மீது தனிக்கவ னம் செலுத்தும் விதமாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சர்க்கரைத் துறையினை வேளாண்மைஉழவர் நலத் துறைக்கு மாறுதல் செய்ய உத்தரவிட்டார்கள்.

சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை அதிகரிக்க பல ஆக்கப்பூர்வமான நட வடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டதன் பலனாக கரும்பு சாகுபடி பரப்பு 95,000 எக்டர் பரப்பிலி ருந்து 1,50,000 எக்டர் பரப் பிற்கு அதிகரித்துள்ளது டன், சர்க்கரை கட்டுமான மும் 9.27 சதவீதமாக அதிகரித்துள்ளது.

செயலற்ற அதிமுக அரசு கரும்பு நிலுவைத் தொகை யாக சுமார் ரூ.675.52 கோடியை விட்டுச்சென்ற நிலையில், தற்போது தமிழ் நாடு முதலமைச்சர் அவர் கள்கரும்புவிவசாயிகளுக்கு கரும்பு கிரைய தொகை யும், தொழிலாளர்களுக்கு ரிய ஊதிய நிலுவைத் தொகையையும் உரிய நேரத்தில் வழங்கி வருகி றார்கள்.

மேலும், கடந்த அ. தி.மு.க. ஆட்சியில் இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலை கள் மட்டுமே இலாபத்தில் இயங்கி வந்த நிலையை மாற்றி தற்போது 4 கூட்டு றவு சர்க்கரை ஆலைகள் இலாபகரமாக இயங்கி வரு கிறது. மேலும், இவ்வரசு பொறுப்பேற்றவுடன் எடுத்து வரும் தொடர் நவீன மயமாக்கல் நடவடிக் கையின் காரணமாக அனைத்து கூட்டுறவு மற் றும் பொதுத்துறை சர்க் கரை ஆலைகளின் பிழிதிறன் உயர்வினால் நஷ்டம் ஒவ்வொரு ஆண் டும் கணிசமாக குறைந்து வருகிறது. கரும்பு விவசாயி களுக்கும், தொழிலாளர்க ளுக்கும் உற்பத்தி ஊக்கத் தொகை, சிறப்பு ஊக்கத் தொகை, கரும்பு நிலுவைத் தொகை, ஊதியம், போனாஸ், அத்தியாவசிய செலவினங்களுக்கு மொத் தமாக ரூ.1223.59 கோடி



அளவிற்கு தமிழ்நாடு முத லமைச்சர் அவர்கள் வழங் கியுள்ளார்.

மேலும், சர்க்கரை ஆலையினை மேம்படுத் தும் பொருட்டு எம்.ஆர். கே. மற்றும் கள்ளக்குறிச்சி1 சர்க்கரை ஆலைகளில் எத்த னால் ஆலை அமைக்கும் பணியும் கடந்த அதிமுக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட இணை மின் திட்ட பணிகளுக்கு புத்துயிர் கொடுக்கப்பட்டு, மீதமுள்ள 6 கூட்டுறவு சர்க் கரை ஆலைகளிலும் இணை மின்திட்ட பணி கள் விரைவுபடுத்தப்பட்டு, செயல்பாட்டுக்கு கொண் டுவர நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது.

செயலற்ற தொழிலாளர் விரோத அ.தி.மு.க. அரசு சர்க்கரை ஆலை தொழிலா ளர்களுக்கு ஒரு ரூபாய் கூட ஊதிய உயர்வு வழங் காமல் மறுத்து வந்தது. சர்க் கரை ஆலைகளின் தொழி லாளர்கள் மற்றும் பணியாளர்களின் கோரிக் கையை தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் கருணை யுடன் பரிசீலனை செய்து, தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு ஊதிய உயர்வு வழங்கும் நோக்கு டன், குழு ஒன்று அமைத்து, குழுவின் அறிக்கையினை பெற்று அதன் அடிப்படை யில் தற்போது ஊதிய உயர்வு வழங்கிட உத்தர விட்டுள்ளார்.

தற்போது வழங்கப்பட் டுள்ள ஊதிய உயர்வின் மூலம் தொழிலாளர்களின் அடிப்படை ஊதியம் 35% அளவிற்கு உயர்த்தப்பட் டுள்ளதுடன், 30.09.2022 வரையிலான காலத்திற்கு நல்லெண்ண தொகையாக (Goodwill amount) நிரந்தர தொழிலாளி ஒருவருக்கு ரூ.40,000 முதல் ரூ.50,000 மற்றும் பருவகால தொழி லாளிக்கு ரூ.,32,000 முதல் ரூ.40,000 வரையில் கிடைக்க வழிவகை செய் யப்பட்டுள்ளது. மேலும், 01.10.2022 முதல் தற்போது வரை உள்ள காலத்திற்கு நிலுவைத் தொகை ரொக்க மாக வழங்கவும் உத்தரவி டப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகள் மற் றும் சர்க்கரை ஆலைகளின் நலனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு ஆக்கபூர்வ மான நடவடிக்கையினை எடுத்துவரும் சூழ்நிலையில் அனைத்து தொழிலாளர்க ளும், பணியாளர்களும் தற்போது தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் வழங்கி யுள்ள ஊதிய உயர்வினை ஏற்று, அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க் கரை ஆலைகளை மேலும் இலாபகரமாக இயக்கிட தங்களது பங்களிப்பினை வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

---

திண்டுக்கல் டாக்டரிடம் ரூ20 லட்சம் லஞ்சம்! கையும் களவுமாக சிக்கிய

# அமலாக்கத்துறை அதிகாரி அதிரடி கைது!

திண்டுக்கல், டிச. 2-

திண்டுக்கல்லில் டாக்டர் ஒருவரிடம் வழக்கை முடித்து தருவதாக கூறி ரூ20 லட்சம் லஞ்சம் பெற்ற அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரி என்பவரை லஞ்ச ஒழிப்புப் போலீசார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

தமிழ்நாட்டில் இந்நாள் முன்னாள் அமைச்சர்கள், தொழிலதிபர்கள், ஒப்பந்ததா ரர்கள் வீடுகள், அலுவலகங்க ளில் பல்வேறு வழக்குகளின் கீழ் அமலாக்கத்துறை அதிகாரி கள் குழு சோதனை நடத்தினர்.

அண்மையில் அமலாக்கத் துறை அதிகாரிகள், மணல் குவாரி விவகாரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்க ளுக்கு சம்மன் அனுப்பி இருந் தனர். இதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத் தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. இதே போல திண்டுக்கல் மாவட் டத்திலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் தொழிலதிபர் ரத் தினம் உள்ளிட்டோர் வீடுக ளில் அடுத்தடுத்து சோதனை நடத்தி இருந்தனர். தற்போது மணல் விவகாரத்தில் தொழி லதிபர் ரத்தினம் தலைமறை வாக இருப்பதாகவும் கூறப்ப டுகிறது. இந்நிலையில் திண்டுக்கல் மாவட்டத்தில் அமலாக்கத்துறை அதிகாரி கள் என்ற பெயரில் தொழில திபர்கள் உள்ளிட்டோரை மிரட்டி பணம் பறிப்பதாக லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

திண்டுக்கல்லைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தம்மி டம் பணம் பறித்த அமலாக் கத்துறை அதிகாரி குறித்தும் தகவல் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் திண்டுக்கல் மதுரை தேசிய நெடுஞ்சாலை யில் வாகன சோதனை நடத் திய போது சந்தேகத்துக்கு உரிய நபர் ஒருவரை போலீ சார் தடுத்து நிறுத்தினர். அந்த நபரின் வாகனத்தை சோத னையிட்ட போது கட்டுக்கட் டாக ரூ20 லட்சம் பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட் டது.

இதனையடுத்து பிடிபட்ட நபரிடம் விசாரணை நடத்தி னர் போலீசார். இந்த விசார ணையில்தான் திண்டுக்கல் டாக்டர் புகார் கொடுத்த அம லாக்கத்துறை அங்கித் திவாரி தான் சிக்கியவர் என தெரிய வந்தது. திண்டுக்கல்லை சேர்ந்த அந்த டாக்டர் மீது அமலாக்கத்துறை வழக்கு பதிவு செய்துள்ளது. இந்த வழக்கை முடித்து வைப்பதற் காக டாக்டரிடம் ரூ20 லட் சம் பெற்றதாகவும் கையும் களவுமாக சிக்கிய அங்கித் திவாரி ஒப்புக் கொண்டிருக்கி றார். இதனையடுத்து அவரது காரில் இருந்த ரூ20 லட்சம் லஞ்சப் பணத்துடன் அம லாக்கத்துறை அதிகாரி அங் கித் திவாரி அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

திண்டுக்கல் மாவட்டத் தில் யார் யாரிடம் மிரட்டி லஞ்சம் பெறப்பட்டது என் பது குறித்தும் அங்கித் திவாரி யிடம் லஞ்ச ஒழிப்புப் போலீ சார் கிடுக்குப்பிடி விசாரணை நடத்தி வருகின்றனர்.

---



இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையில், சைதாப்பேட்டை அரசு மகப்பேறு மருத்துவமனையில் பிறந்த 15 குழந்தைகளுக்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தங்க மோதிரம் மற்றும் பரிசு பெட்டகங்களை வழங்கினார். இந்நிகழ்வில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன், சைதை மேற்கு பகுதி செயலாளர், 10வது மண்டக்குழுத்தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி செயலாளர், 13வது மண்டக்குழுத்தலைவர் இரா.துரைராஜ், சென்னை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், மாமன்ற உறுப்பினர் வழக்கறிர் எம்.ஸ்ரீதரன், வட்ட கழக செயலாளர்கள், பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

## ‘திராவிடப் பேரொளி’ அயோத்திதாசப் பண்டிதருக்குச் சிலை - மணிமண்டபம் திறந்து வைத்தது

# திராவிட மாடல் அரசுக்குக் கிடைத்த பெருமை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, டிச. 2 -**

**சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ‘திராவிடப் பேரொளி’ அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபத்தைத் திறந்து வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய உரையில் “அயோத்திதாசப் பண்டிதருக்கு திருவுருவச் சிலையுடன் மணிமண்டபம் திறந்து வைத்தது திராவிட மாடல் அரசுக்குக் கிடைத்த பெருமை!” என்று குறிப்பிட்டார்.**

இவ்விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2023) சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் திராவிடப் பேரொளி அயோத்திதாச பண்டிதர் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தைத் திறந்து வைத்து, அவரது திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாட்டினுடைய அறிவியக்கத்தின் மாபெரும் பேரொளியாகத் திகழ்ந்த அயோத்திதாசப் பண்டிதருக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு மணிமண்டபம் அமைத்துச் சிறப்புச் செய்கிறது. இது அரசுக்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமை!

“வான்புகழ் வள்ளுவர்! அறநெறி இலக்கணம் வகுத்த அவ்வை! சமரச நெறி வகுத்த வள்ளலார்! இந்த வரிசையில், தமிழ்ச் சிந்தனை மரபை வளர்த்தெடுத்த மாபெரும் ஆளுமையான அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில், சென்னையில், அவருடைய திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும்” என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கடந்த 3.9.2021 அன்று நான் அறிவித்தேன்.

சென்னை கிண்டி காந்தி மண்படம் வளாகத்தில் அயோத்திதாசப் பண்டிதருடைய திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் எழில்மிகு தோற்றத்தோடு ‘அறிவொளி இல்லமாக’ அமைக்கப்பட்டிருக்கிறது.

அறிவுலகப் பேரொளியான அவருடைய மணிமண்டபத்தைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

● தமிழ்நாட்டு அரசியலில் தமிழன், திராவிடன் ஆகிய இரண்டு சொற்களையும் அடையாளச் சொல்லாக மாற்றியவர் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள்! தமிழ் அல்லது திராவிடம் என்பது மொழி மட்டுமல்ல! அதை ஒரு பண்பாட்டு நடைமுறையாகப் பார்த்தவர் அயோத்திதாசர் அவர்கள்.

● 1881ஆம் ஆண்டே மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ‘பூர்வத் தமிழர்’ என்று பதியச் சொன்னவர் அயோத்திதாசர் அவர்கள்.

● 1891ஆம் ஆண்டு அவர் தொடங்கிய அமைப்பின் பெயர் ‘திராவிட மகாஜன சபை’!

● 1907ஆம் ஆண்டு ‘ஒரு பைசாத் தமிழன்’ என்ற இதழைத் தொடங்கி, அதையே ’தமிழன்’ என்ற இதழாக நடத்தி வந்தார்.

### ஒடுக்கப்பட்ட மக்கள் திராவிடர்களாக இணைய போராடியவர்!

ஒடுக்கப்பட்ட மக்கள் அனைத்து வேற்றுமைகளையும் மறந்து தமிழர்களாக, சாதி பேதமற்ற திராவிடர்களாக ஒன்றிணைய வேண்டும் என்று இறுதி வரை எழுதியவர், பேசியவர், போராடியவர் அயோத்திதாசர் அவர்கள்.

- எழுத்தாளர்,
- ஆய்வாளர்,
- வரலாற்று ஆசிரியர்,
- மானுடவியல் சிந்தனையாளர்,
- பதிப்பாளர்,
- பத்திரிகையாளர்,
- மருத்துவர்,
- பேச்சாளர்,
- மொழியியல் வல்லுநர்,
- பன்மொழிப் புலவர்,
- புதிய கோட்பாட்டாளர்,
- சிறந்த செயல்பாட்டாளர்,
- சளைக்காத போராளி என்று

பன்முக ஆற்றல் கொண்டவராகச் செயல்பட்ட அயோத்திதாசர் அவர்கள், தான் வாழ்ந்த காலம் முழுவதும் அறிவொளி பரப்பியவர்! இவர் அமைத்துக் கொடுத்த அறிவுத் தளத்தில்தான் 150 ஆண்டுகால தமிழர் அறிவியக்கம் செயல்பட்டு வருகிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரூ.2.49 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள திராவிடப் பேரொளி அயோத்திதாச பண்டிதர் அவர் களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைகோ, தொல். திருமாவளவன், ஆ. ராசா, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், ரவிகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் கே.எம். காதர் மொஹிதீன், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் பி. சந்தர மோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அயோத்திதாசப் பண்டிதர்தான் தந்தை பெரியாரின் முன்னோடி!

“என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடி அயோத்திதாசப் பண்டிதர்தான்” என்று ‘பகுத்தறிவுப் பகவலன்’ தந்தை பெரியார் அவர்கள் சொன்னார். இவருடைய பத்திரிகைகளுக்கும், புத்தகங்களுக்கும் உலக அளவில் வாசகர்கள் உருவானார்கள்.

“இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு சாதியும் மதமுமே தடை” என்று சொன்ன அயோத்திதாசர், “மனிதர்களை, மனிதர்களாகப் பார்க்கும் எவரோ, அவர்தான் மனிதர்” என்று முழங்கினார். அவருடைய நூல்கள் இன்றைக்கும் அறிவொளி ஊட்டுவதாக இருக்கிறது.

1845 முதல் 1914 வரை வாழ்ந்த அயோத்திதாசர் அவர்களுடைய 175வது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவருடைய அறிவை வணங்குகின்ற விதமாகவும் இந்த மணிமண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆதி திராவிடர் குடியிருப்புகளை மேம்படுத்த, “அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்” வரும் ஐந்தாண்டுகளில் 1000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது என்ற அறிவிப்பையும் நம்முடைய திராவிட மாடல் அரசு செய்திருக்கிறது.

மகான் புத்தரை ‘இரவு பகலற்ற ஒளி’ என்று சொன்ன அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய சிந்தனைகளும், இரவு பகலற்ற ஒளியாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### சென்னை - கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் - ‘திராவிடப் பேரொளி’

# அயோத்திதாசப் பண்டிதரின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, டிச.2-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரூ.2.49 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள திராவிடப் பேரொளி அயோத்திதாச பண்டிதர் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தைத் திறந்து வைத்தார்.**

அதன் விபரம் வருமாறு:-

திராவிடப் பேரொளி அயோத்திதாச பண்டிதர் அவர்கள் கி.பி 1845 ஆண்டு மே 20ஆம் நாள் பிறந்தவர். இவருடைய தந்தையார் கந்தசாமி, தாய் திருமதி ஆதிலட்சுமி. அயோத்திதாசரின் இயற்பெயர் காத்தவராயன். அவர் அயோத்திதாச தமிழ்க் கவிராஜ பண்டிதரிடம் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுடன், சித்த மருத்துவமும் நன்கு கற்றுத் தேர்ந்தார். ஆசிரியர்பால் கொண்ட பற்றால் தன் பெயரை அயோத்திதாசர் என மாற்றிக் கொண்டார். சித்த மருத்துவம் கற்றுச் சிறந்த மருத்துவராகத் திகழ்ந்தார்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் சிறுவனாக இருந்த போது, அவருக்கு ஏற்பட்டிருந்த நோய்க்குத் தக்க மருந்து கொடுத்து அவரைக் குணப்படுத் தியுள்ளார். இதனை, திரு.வி.க. அவர்கள், தம்முடைய “வாழ்க்கைக் குறிப்புகள்” என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அயோத்திதாசர் இப்படிச் சித்த மருத்துவ வல்லுநராகத் திகழ்ந்த போதும், அன்றைய சமுதாயத்தில் நிலவிய சாதிக் கொடுமைகளைக் கண்டு கொதித்து, அவற்றை எதிர்த்து ஒரு போராளியாக உருவெடுத்தார்.

அயோத்திதாசர் தமிழ், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் ஆகிய பல மொழிகளில் தனிப் புலமை பெற்று, இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், பவுத்தத் தத்துவம் உள்ளிட்ட பலதுறை நூல்களையும் ஆழ்ந்து கற்றுள்ளார். இத்தகைய ஆழ்ந்த படிப்பே அவரது புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளம் அமைத்தது.

ஆதிதிராவிட சமுதாயத்தை முன்னேற்றுவதற்கு உறுதி கொண்டு பாடுபடத் தொடங்கிய அயோத்திதாச பண்டிதர் அவர்கள் 1870ஆம் ஆண்டில் அத்வைதானந்த சபையை ஏற்படுத்தினார். 1881ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப் பட்டபோது தாழ்த்தப்பட்டவர்களை, “பஞ்சமர்”, “பறையர்” எனக் குறிப்பிடாமல், “பூர்வத் தமிழர்” அல்லது ஆதித்தமிழர் எனப் பதிவு செய்யுமாறு, அன்றைய ஆங்கிலேய அரசிடம் கோரிக்கை வைத்தார். 1890 இல் திராவிட மகாஜன சபையைத் தொடங்கினார். அதன் முதல் மாநாட்டை நீலகிரியில் 1.12.1891 இல் நடத்தி, அதன்மூலம் 10 தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றைச் செயல்படுத்தி உதவுமாறு ஆங்கிலேய அரசுக்கு அனுப்பினார். அப்போது, அயோத்திதாசருக்குத் துணையாக நின்றவர்களில் மீனவர்குல மாமேதை எனப் போற்றப்பட்ட சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர், பேராசிரியர் லட்சுமி நரசு நாயுடு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

“இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்குச் சாதியும் மதமுமே தடை” என்று கூறியவர் அயோத்திதாசர். சாதி பேதத்தை அகற்றிச் சமத்துவச் சிந்தனை வளர்க்க அயோத்திதாசர், 1885 இல் ரெவரெண்ட் ஜான் ரத்தினத்தோடு இணைந்து, “திராவிடப் பாண்டியன்” எனும் வார இதழைத் தொடங்கினார். பின்னர் 1907 இல், “ஒரு பைசாத் தமிழன்” எனும் பெயரில் பத்திரிகையைத் தொடங்கினார். இப்பத்திரிகை, 19.6.1907 முதல் 19.8.1908 வரை 62 இதழ்களை வெளியிட்டுள்ளது. புதன்கிழமை தோறும் 4 பக்கங்களாக வெளிவந்த இந்தப் பத்திரிகையை அச்சிட 20.8.1908 அன்று அச்சகத்தார் மறுத்தபோது, புதிய அச்சகத்தில் இப்பத்திரிகை, “தமிழன்” எனும் பெயரில் 2.9.1908 அன்று பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு பைசாத் தமிழன் பெயரில் வெளிவந்த 62 இதழ்களிலும் அரசியல், சமூகச் சீர்திருத்தம், தந்தி செய்திகள் கடிதங்கள் முதலியவை இடம் பெற்றன. இந்த இதழ்களில் எழுதப்பட்ட தொடர்கள் யாவும் இன்றைய முனைவர் பட்ட ஆய்வேடுகளையும் மிஞ்சக் கூடியவை என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சாதிமத வெறியுணர்வுகளை முழுமையாக அழிப்பதற்குச் சரியான சான்றுகளை இலக்கண, இலக்கிய, தமிழ், பாலி, சமஸ்கிருத மொழிச் சான்றுகள் மூலம் தெளிவுப்படுத்தியுள்ளார்.

அயோத்திதாசரின் சிந்தனைகள் தமிழ்ச் சமுதாயத்தில் விழிப்புணர்வையும் எழுச்சியையும் ஏற்படுத்தியவை. பல்வேறு நூல்களையும் ஏராளமான கட்டுரைகளையும் படைத்த அவர் 1914 ஆம் ஆண்டு காலமானார்.

தந்தை பெரியார் அவர்கள், அயோத்திதாச பண்டிதரைப் பற்றிக் குறிப்பிடும் போது, “என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துகளுக்கும் இவரே முன்னோடி” என்று கூறிப் புகழ்ந்துள்ளார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்கள் தம்முடைய, “திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்” என்னும் நூலில், “பேர்” பெற்ற மருத்துவர் அயோத்திதாசரால்தான் “என்னுடைய மதப் பற்று ஒழிந்தது” என்று இவரைப் பற்றி மனம் திறந்து பாராட்டியுள்ளார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திராவிடப் பேரொளி அயோத்திதாச பண்டிதர் அவர்களின் பெருமைகளைப் போற்றும் வகையில் 21.10.2006 அன்று அயோத்திதாசரின் அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அயோத்திதாசர் சமூகநீதித் தளத்தில் ஆற்றிய தொண்டுகளைப் போற்றிப் புகழும் வகையில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ், 3.9.2021 அன்று உரையாற்றுகையில், “1845 முதல் 1914 வரை வாழ்ந்த அயோத்திதாசர் அவர்களுடைய 175வது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது அறிவை வணங்கும் விதமாகவும் அவருக்கு நினைவரங்கம் அமைக்கப்படும்” என்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்கள்.

அந்த அறிவிப்பின்படி, “தமிழன்”, “திராவிடன்” எனும் இந்த இரண்டு சொற்களையும் அரசியல் களத்தில் அடையாளச் சொல்லாக மாற்றி, அறிவாயுதம் ஏந்திய திராவிடப் பேரொளி அயோத்திதாச பண்டிதர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் ரூ.2.49 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலை, நூலகம் ஆகியவற்றுடன் கூடிய மணிமண்டபத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைகோ, தொல். திருமாவளவன், ஆ.ராசா, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், ரவிகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அரவிந்த் ரமேஷ், இ.பரந்தாமன், கணபதி, அசன் மௌலானா, கு.செல்வப் பெருந்தகை, எஸ். எஸ். பாலாஜி, பாபு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் கே.எம். காதர் மொஹிதீன், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தர மோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ.சி. மணி

### டிசம்பர் 2 (2016)



**தலைவர் கலைஞர் அவர்களால் ‘தம்பி மணி’ என பாசம் பொங்க அழைக்கப்பட்ட கழகத்தின் தளகர்த்தர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்த இவர், மிட்டா, மிராசுகள் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் ஒரு சாதாரண, தொண்டனாக திராவிட இயக்கக் கொள்கைகளையே தமது மூலதனமாகக் கொண்டு அதனை நெஞ்சில் ஏந்தி வலம் வந்தவர். சிறு வயது முதலே தன்னை இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்டு ஓயாது பணியாற்றிய உயரிய பண்புக்கும் – எளிமைக்கும் சொந்தக்காரர்.**

**தந்தை பெரியார் அவர்களின் மேடைப் பேச்சால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் இணைத்துக் கொண்ட இவர், கழகம் தொடங்கிய 1949–ஆம் ஆண்டிலேயே மேக்கிரி மங்கலம் கிராமக் கிளையின் பொருளாளராகவும் – மயிலாடுதுறை வட்டக்கிளைச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மண்டலப் பொறுப்பாளராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் கழகத்தை வளர்க்க ஓய்வறியாது பாடுபட்டவர்! தலைவர் கலைஞர் அவர்களின் சொல்லே அவருக்கு வேத வாக்கு எனச் செயல்பட்டவர்.**

**தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்காக மட்டுமின்றி, தமிழக விவசாயிகளுக்காகவும் போராட்டங்கள் பல நடத்தியதோடு மட்டுமல்லாமல், இவர் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**இவர் குடந்தை மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் சந்திரசேகர்புரம் கூட்டுறவு மொத்தவிற்பனைப் பண்டக சாலையின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**இவர் 1962, 1989, 1996, 2001, 2006 என ஐந்து முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1968–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இரண்டு முறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றினார். 1989, 2006 ஆகிய இரு முறை வேளாண்மைத் துறை அமைச்சராகவும் – 1996ல் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் திறம்படப் பணியாற்றியவர்.**

**2001ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்குப் பெரியார் விருதினை, தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.**

**“என்னரும் தளகர்த்தர் கோ.சி.மணி, எங்கோ போய்விட்டாரே!” என தலைவர் கலைஞர் இரங்கல் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2023) அவரது இல்லத்தில், நினைவில் வாழும் குடியரசு (எ) செ.ஆண்ரூஸ் – திருமதி ஜெயந்தி ஆண்ரூஸ் தம்பதியரின் மகனும் கழக மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளருமான அசோக் ஆண்ரூஸ் – மனோஜ் லட்சுமி காசிநாதன் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!



சிவகங்கை. டிச.2-

வருகிற 4-ஆம்தேதி சிவகங்கை மாவட்டத்திற்கு வருகைதரும் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு தர மாவட்ட கழக கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சார்புஅணி நிர்வாகிகள், உள்ளாட்சிபிரதிநிதிகள் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர்வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் வருகிற டிசம்பர் 4 ஆம் தேதி கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை குறித்து மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே ஆர். பெரியகருப்பன் விளக்கிக் கூறினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. கழகத்தின் நாடி துடிப்பான இளைஞரணியின் இரண்டாவது மாநாடு வருகிற சிறப்பாக டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ளது. அதற்கான ஏற்பாட்டினை துடிப்புடன் செய்து வரும்கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நேரடியாக சென்று இளைஞரணி பாசறைக் கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி வருகிறார். மேலும் தலைவர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு கழக மூத்த முன்னோடி களுக்கு பொற்கிழி வழங்கி சிறப்புரையாற்றுகிறார். அதன் தொடர்ச்சியாக வருகிற 4ம்தேதி சிவகங்கை மாவட்டத்திற்கு வருகைதரும் அமைச்சர் உதயநிதி அவர்கள் இளைஞரரணி பாசறை கூட்டம் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்புரை ஆற்ற உள்ளார். 4ம்தேதி சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிறப்பான முறையில் வரவேற்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன் மாவட்ட துணை செயலாளர் கே. எஸ் .எம். மணிமுத்து, மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட துணைச்செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து நன்றி கூறினார்.


## 23-ஆம் ஆண்டு
# நினைவு அஞ்சலி

வறுமையில் நேர்மை!
வளமையில் எளிமை!!

டிசம்பர் 02 2023



N.V.வீரய்யன் INA அவர்கள்
நகர தி.மு.க மு.அவைத் தலைவர்
நகரமன்ற மு.உறுப்பினர்
வர்த்தகர் சங்க மு.தலைவர்

...நீங்கா நினைவுகளுடன்...

வீரா.கணேசன் B.Com.,
நகர கழகச் செயலாளர்,
மன்னார்குடி.

வீரா.கதிரவன் M.A., M.L.,
மூத்த வழக்குரைஞர்,
அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்
உயர்நீதிமன்றம் - மதுரை.


# நினைவைப் போற்றும் சிலைகள்!

### பேராசிரியர் சுப.வீரபாண்டியனின் ஒரு நிமிட செய்தி! (1.12.2023)







இன்று காலை சென்னை - கிண்டியில் 'திராவிட பேரொளி' அயோத்திதாசப் பண்டிதருக்கு சிலையும் மணி மண்டபமும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படுகிறது.

இதுபோல சமூக சீர்திருத்த வாதிகள், இந்த நாட்டுக்காக பாடுபட்டவர்களுக்கு தொடர்ந்து சிலைகளை, மணி மண்டபங்களை அறிஞர் அண்ணா அவர்களின் காலம் தொட்டு தி.மு.கழக ஆட்சி நடத்தி வருகிறது.

1969 வது ஆண்டு சிதம்பரத்திலே சகஜானந்தா அவர்களுக்கு சிலை அமைக்கப் பட்டது. அவர் பட்டியல் இன மக்களுக்காக கல்விக்காக பாடுபட்டவர்.

1972 ஆம் ஆண்டு விடுதலைப் போராட்ட வீரர் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. அவர்களுக்கு துறைமுகத்திலே சிலை மட்டுமல்ல அந்தத் துறைமுகத்திற்கு அவருடைய பெயரும் சூட்டப்பட்டது.

அதற்குப் பிறகு 1989 ஆம் ஆண்டு நம்முடைய கருத்துக்களுக்கு எதிராக இருந்தாலும் சத்தியமூர்த்தி அவர்களுக்கு திருமயத்திலே சிலை. 1990 லே சென்னையிலே பாபு ஜெகஜீவன் ராம் அவர்களுக்குச் சிலை, 1999-ல் வேலூரில் கிருபானந்த வாரியார் அவர்களுக்கு மணி மண்டபம், 2001-ல் உடுமலைப் பேட்டையில் உடுமலை நாராயண கவிக்கும், பிறகு குன்றக்குடியில் குன்றக்குடி அடிகளாருக்கும் மணிமண்டபம்.

எல்லாவற்றையும் தாண்டி 18 ஆண்டுகளாக மூடிக் கிடந்த திருவள்ளுவர் சிலையை பெங்களூரில் திறப்பதற்கு ஏற்பாடு செய்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

**- பேராசிரியர் சுப.வீரபாண்டியன்**

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. சிறப்புரை!

# சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி ஆலோசனை கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் வேண்டுகோள்!

சென்னை, டிச.2

சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (02.12.2023, சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு மயிலாப்பூர் சி.பி. ராமசுவாமி சாலை அலுவலகத்தில், மாவட்ட தலைவர் ச.தேவராசு தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்.

எனவே இக்கூட்டத்தில் இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் , பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் .

பொருள் : கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆலந்தூர் ம. ஆபிரகாம்
### டிசம்பர் 2 (1987)



ஆலந்தூர் நகரக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து கழகம் நடத்திய சட்டப்பிரிவு நகல் எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக, 1986ஆம் ஆண்டு ஆளுங்கட்சியால் சட்டமன்றத்தில் பதவிப் பறிப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, பதவி பறிக்கப்பட்ட பேராசிரியர் உள்ளிட்ட பதின்மருள் ஆபிரகாமும் ஒருவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி நிலை காலத்தில் 'மிசா' கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

"கழகத்தின் இரும்புத் தூண், எதிர்ப்புக்கும், இன்னலுக்கும், அடக்குமுறைக்கும் என்றுமே வளைந்து கொடுக்காத உறுதி படைத்த கொள்கைக் குன்றம்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ம.அசோக்குமார் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கால்பந்து போட்டி!

## தயாநிதி மாறன் எம்.பி. துவக்கி வைக்கிறார்! மேயர் ஆர்.பிரியா ராஜன் - கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, டிச.2-

சென்னை கிழக்கு மாவட்டம், திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி கலைஞர்100, 67வது நிகழ்ச்சியாக "வெற்றியே வீரரின் இலக்கு! வழங்கிடும் சூரிய கிழக்கு! எனும் தலைப்பில் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில், சென்னை, திரு. வி.க.நகர் கால்பந்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் கால்பந்து போட்டியில், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ம.அசோக்குமார் தலைமை வகிக்கின்றார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி., கே.சந்துரு, சரிதா மகேஷ்குமார் எம்.சி., தேவஜவகர், சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள்: எ.பாபுராஜ், வி.ஜெ.திலிப்குமார், எஸ்.வடிவேல், எம். கமலநாதன் ஆர்.சீனிவாசன், என்.மோகன்குமார், த.விஜயகுமார், பி.ஆர்.யஷ்வந்த்குமார், கே.ஜெயகுமார், சி.லதா, எம். இளங்கோவன், எ.விஜய் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இம்மாபெரும் கால்பந்து போட்டியை கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர், விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. துவக்கி வைக்கிறார்.

மேலும், இவ்விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினர், வணக்கத்திற்குரிய மேயர். பிரியாராஜன், கழக அயலக அணித்தலைவர் டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.பி., கழக சட்டதிட்ட திருத்தக்குழு செயலாளர், இரா.கிரிராஜன் எம்.பி., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி., தமிழன்பிரசன்னா, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர் நன்மாறன், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதி இளம்சுருதி எம்.சி., ஆர்.வரதன், வே.உமாகாந்த்.

மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி., இசட் ஆசாத் எம்.சி., மண்டல குழு நிலைக்குழு தலைவர்கள்: கூ.பி.ஜெயின் எம்.சி., ஸ்ரீராமுலு எம்.சி., சொ.வேலு எம்.சி., டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி., பகுதிகழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ. மணி, டி.வி.செம்மொழி எம்.சி.,பி.ஜே.துளசிங்கம், வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி., பி.உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், டாக்டர். ஏ.பி.பூர்ணிமா எம்.சி., எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி

மாவட்ட அணிகளின்ன அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: டி. லோகேஷ், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, வானவில் விஜய், நா.துலுக்காணம், ஜி. தாமோதரன், எல்.பி.எப்.மோகன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி., பி. விஜயகுமார், எம்.விநாயகம், க.பா.பிரதீப் குமார், எல்.சம்பத்குமார். க.ராஜ்முகம்மது, கு. கிருஷ்ண மூர்த்தி, து.ஆயிரம். கொளத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: எம்.தாவுத்பீ எம்.சி., கே.சாராதா எம்.சி., யோகபிரியா தனசேகர் எம்.சி., பி.அமுதா பொன்னிவளவன் எம்.சி., சி. ஸ்ரீதணி எம்.சி., உள்ஆளிட்ட பலர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கழக வர்த்தகர் அணி சார்பில் திருச்சி கலைஞர் அரங்கத்தில் அணியின் செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கலை இரவு நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். இவ்விழாவில் பேராசிரியர் கி.பாரதி ராஜா குழுவினரின் சிலப்பதிகாரம், சாக்ரடீஸ் நாடகர்களின் அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது. வர்த்தகர் அணி துணைத் தலைவர் – அரசுக் கொறடா கோவி.செழியன், பழஞ்சூர் செல்வம், வரகூர் வி.எஸ்.பெரியசாமி, அசோக்பாண்டியன், திருச்சி மேயர் அன்பழகன் மற்றும் நிர்வாகிகள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.








கோவை ஒருங்கிணைந்த
திமுக மாவட்ட இளைஞரணி
செயல்வீரர் கூட்டத்திற்கு வருகை தரும்
முத்தமிழறிஞரின்
இளைய
தமிழே!
வருக! வருக!
மாண்புமிகு அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள்,
வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை
நா.கார்த்திக் Ex.MLA.,
கோவை மாநகர்
மாவட்டச் செயலாளர்
தளபதி முருகேசன்
கோவை தெற்கு
மாவட்டச் செயலாளர்
தொ.அ.ரவி
கோவை வடக்கு
மாவட்டச் செயலாளர்
ஒருங்கிணைந்த கோவை மாவட்ட திமுக


நீலகிரி மாவட்ட திமுக இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து சிறப்பிக்க
நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தரும்...
கழக இளைஞர் அணி செயலாளர், விளையாட்டுத்துறை அமைச்சர்
இளைஞர்களின் எழுச்சி நாயகன்
மாண்புமிகு.
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே
வருக! வாழ்க!! வெல்க!!!
ஆ.இராசா
B.Sc.,ML.,MP., கழக துணை பொதுச்செயலாளர்
கா.ராமசந்திரன்
தேர்தல் பணி செயலாளர்
சுற்றுலாத்துறை அமைச்சர்
பா.மு.முபாரக்
மாவட்ட கழக
செயலாளர்
மற்றும் கழக நிர்வாகிகள்
மாவட்ட திமுக - நீலகிரி


நாள் : 02.12.2023
சனிக்கிழமை
இடம் : கோவை
ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்
ARASU ARTS
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதிஸ்டாலின்
அவர்களை வருக. வருக.. என அன்புடன் வரவேற்கிறோம்...
திரு. சு.முத்துசாமி
மாண்புமிகு வீட்டு வசதி நகர்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்
திரு. V.செந்தில்பாலாஜி
தமிழ்நாடு அமைச்சர்
கரூர் மாவட்ட கழகச் செயலாளர்
தொ.அ.ரவி
கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
வி.சி.ஆறுக்குட்டி Ex.MLA.
கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி
கே.இ.பிரகாஷ்
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்
பி.எஸ்.சீனிவாசன்
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்
இரா.ராஜீவ்காந்தி
கழக மாணவர் அணித் தலைவர்
எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம்
கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அமைப்பாளர்
அசோக்பாபு ஆறுக்குட்டி B.Tech.,
மாவட்ட துணைச் செயலாளர் – கோவை வடக்கு மாவட்டம்
மனோஜ் முத்துசாமி B.A.,
துணை அமைப்பாளர் – கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி
கோவை வடக்கு மாவட்ட தி.மு.க (ம) இளைஞர் அணி

கேலோ இந்தியா - இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற

# 231 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.5.28 கோடி ஊக்கத்தொகை!

## சென்னையில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, டிச.2-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னை ஐ.டி.சி. கிராண்ட் சோழா ஹோட்டலில் நேற்று (01.12.2023) நடைபெற்ற சர்வதேச, தேசிய மற்றும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கும் விழாவில், 231 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.5.28 கோடி மதிப்பில் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

**தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் சார்பில் ரூ.8.25 இலட்சம் மதிப்பில் பாரா விளையாட்டு வீரர் ரமேஷ் அவர்களுக்கு பந்தய சக்கர நாற்காலியை வழங்கினார்.

**சர்வதேச வாலிபால் கூட்டமைப்பு மற்றும் பேஸ்லைன் வென்சர்ஸ் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இந்த விழாவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சர்வதேச வாலிபால் கூட்டமைப்பு (Federation International de Volleyball) மற்றும் பேஸ்லைன் வென்சர்ஸ் (Baseline Ventures) இடையே கிளப் வேர்ல்டு சாம்பியன்ஷிப் 2024 (Club World Championship2024) மற்றும் ரூபே பிரைம் வாலிபால் சீசன் 3 (Rupay Prime Volleyball Season3) போட்டிகளை நடத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமானது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது.

இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

பல்வேறு சர்வதேச, தேசியப் போட்டிகளில் பதக்கங்களை குவித்து தமிழ்நாட்டுக்குப் பெருமைத் தேடித் தந்த தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகள் 231 பேருக்கு மொத்தம் 5 கோடியே 30 லட்சம் ரூபாய் அளவுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஹரியானா மாநிலத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா போட்டிகளில் வென்ற 120 வீரர்களுக்கு மொத்தம் 1 கோடியே 40 லட்சம் ரூபாய், தேசிய குத்துச் சண்டை போட்டிகள் 2023ல் பதக்கங்களை குவித்த 53 பேருக்கு 1 கோடியே 36 லட்சம் ரூபாய், 57 ஆவது National RollerSkating Championship 2022ல் வென்ற 12 பேருக்கு மொத்தம் 33 இலட்சம் ரூபாய், SubJunior, Junior and Senior Level National Swimming Championship2021ல் பல்வேறு பதக்கங்களை குவித்த 36 பேருக்கு 1 கோடியே 39 லட்சம் ரூபாய், ஆசிய வாள் வீச்சு போட்டியில் வெண்கலம் வென்ற வீராங்கனை பவானி தேவிக்கு 4 லட்சம் ரூபாய், சர்வதேச மற்றும் தேசிய செஸ் போட்டிகளில் சாதித்த ராஜு முகம்மது - ஜமாலுதீன் அனீஸ் - விக்னேஷ், சேதுராமன் உள்ளிட்ட வீரர், வீராங்கனையருக்கு 84 லட்சம் ரூபாய் என மொத்தம் 231 வீரர், வீராங்கனைகளுக்கு 5 கோடியே 30 லட்சம் ரூபாய் அளவுக்கு இன்றைய தினம் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதாரம் தடையாக கூடாது!**

உயரிய ஊக்கத்தொகை என்றால், அதிகமான நிதி வழங்குவது என்று மட்டும் அர்த்தமல்ல. விளையாட்டில் உயரிய இடத்தை பிடித்தோருக்கான ஊக்கத்தொகை என்றும் அதற்கு அர்த்தம் உள்ளது. திறமையான விளையாட்டு வீரர்களுக்கு எந்த வகையிலும், பொருளாதாரம் என்பது ஒரு தடையை ஏற்படுத்திவிடக் கூடாது என்னும் நோக்கத்தோடு கழக அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஏற்கனவே, நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில், ELITE scheme, Mission International Medal Scheme, Champions Development Scheme போன்ற திட்டங்கள் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக நடைமுறையில் உள்ளன. இதைத்தாண்டியும் விளையாட்டு வீரர்களுக்கு துணை நிற்க வேண்டும் என்பதன் அடிப்படையில், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை என்னும் முக்கியமான முன்னெடுப்பை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அந்த அறக்கட்டளையின் மூலம் பன்னாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகளுக்கு, பயணம் மற்றும் தங்குமிடச் செலவு, விசா கட்டணம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுக்காக நிதியளித்து வருகிறோம். மேலும், தேசியப் போட்டிகளில் பங்கேற்க வெளி மாநிலங்களுக்குச் செல்வோருக்கும் நிதியுதவிகளை நம் கழக அரசு செய்து வருகிறது.

**100-க்கும் அதிகமான வீரர்களுக்கு ரூ.4 கோடி நிதியுதவி!**

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக, 100க்கும் அதிகமான வீரர், வீராங்கனைகளுக்கு இது வரை 4 கோடி ரூபாய் அளவில் நிதியுதவி அளித்துள்ளோம். நாம் நிதியுதவி அளிக்கின்றோம். அதைப் பெற்றுச் செல்லும் வீரர், வீராங்கனைகள் பதக்கங்களை வென்று வந்து நமக்கு பெருமையை சேர்க்கின்றனர். குறிப்பாக மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளின் திறமையை நாம் பாராட்டியே ஆக வேண்டும். ஜெர்மனியில் நடைபெற்ற World Dwarf Gamesல் பங்கேற்க சென்ற நம்முடைய வீரர், வீராங்கனைகள் 8 பேருக்கு தலா 2 லட்சம் ரூபாய் வீதம் நிதியளித் தோம்.

நாம் எப்படி எதிர்பார்த்தோமோ, அதே போல, அவர்கள் அனைவரும் பதக்கங்களுடன் திரும்பி வந்தார்கள். அவர்கள், அடுத்தடுத்தப் போட்டிகளில் சாதிக்கும் வகையில், நாம் மேலும் ஊக்கத்தொகை வழங்கி வருகிறோம். செஸ் போட்டியில் பிரக்ஞானந்தா, ஹாக்கியில் கார்த்தி என சாதனை புரியும் நம் வீரர்களை முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கவுரவித்து வருகிறார்கள்.

சர்வதேச செஸ் உலகக் கோப்பையில் சாதனை படைத்த பிரக்ஞானந்தாவுக்கு ரூபாய் 30 லட்சம் ஊக்கத்தொகை வழங்கினார்கள். இந்திய ஹாக்கி அணியில் இடம்பெற்ற தம்பி கார்த்திக்கு முதலமைச்சர் அவர்கள் வீடு வழங்கினார்கள். 2019 முதல் பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வென்ற 160 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு கடந்த மார்ச் மாதம் 2 கோடியே 60 லட்சம் ரூபாய் அளவுக்கு ஊக்கத்தொகை வழங்கி வாழ்த்தினார்கள்.

தேசிய அளவிலான சீனியர் மகளிர் கால்பந்து போட்டியில் தங்கம் வென்ற நம்முடைய வீராங்கனைகளுக்கு 60 லட்சம் ரூபாயினை ஊக்கத்தொகையாக வழங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வென்றோருக்கும் உயரிய ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார்களோ, அதே அளவுக்கு விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள்.

மாணவர்கள் கலந்து கொள்ளும், எந்த நிகழ்ச்சிக்கு சென்றாலும், நான் இரண்டு விஷயங்களை கூறுவதுண்டு. ஒன்று ஆசிரியர்களுக்கு, மற்றொன்று மாணவர்களுக்கு. Maths, Science ஆசிரியர்களிடம் P.E.T வகுப்பை கடன் வாங்காதீர்கள். முடிந்தால் உங்கள் பாட நேரத்தில் மாணவர்களை விளையாட அனுமதியுங்கள் என்று கேட்டு வருகிறேன்.

அதைப் போலவே, மாணவ, மாணவியரிடம், படிப்புக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை, விளையாட்டிற்கும் கொடுங்கள் என்று எடுத்து கூறி வருகிறேன். நன்றாக விளையாடினால், உடல்நலம் மட்டுமல்ல, மனநலமும் சிறந்து விளங்கும். தமிழ்நாட்டை விளையாட்டுத்துறை தலைநகராக்க நம்முடைய கழக அரசு ஏராளமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**வீரர், வீராங்கனைகளின் திறமைகளை மெருகேற்றி வருகிறோம்!**

அரசு, தனியார் என எங்கெல்லாம் வாய்ப்புகள் இருக்கிறதோ, அவற்றை பயன்படுத்தி நம் வீரர், வீராங்கனைகளின் திறமைகளை மேலும் மெருகேற்றி வருகிறோம். அதன்படி, Badminton பயிற்சிக்காக நம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துக்கும் Jwala Gutta Badminton academy of excellenceக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதேபோல, இன்றைக்கு Prime Volley Ball League Private Limited உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம். இதன் மூலம் உலகத்தரத்திலான வீரர், வீராங்கனை களை நாம் உருவாக்க முடியும்.

ஏற்கனவே, செஸ் ஒலிம்பியாட்டில் ஆரம்பித்து, உலகக் கோப்பை ஸ்குவாஷ், ஆசிய ஹாக்கிப் போட்டி, World Surfing League, Cyclothon என பல்வேறு போட்டிகளை நடத்தியுள்ளோம். மாதம் ஒரு பன்னாட்டு அல்லது தேசிய அளவிலான போட்டிகளை நம்முடைய கழக அரசு நடத்தி வருகிறது என்பதை பெருமையுடன் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அந்த வகையில், இந்தியாவிலேயே முதன்முறையாக Formula4 Night Racing Circuit போட்டிகள் சென்னை தீவுத்திடலை சுற்றி வருகிற 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளன. அதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

மேலும், தமிழ்நாட்டில் முதன் முறையாக கேலோ இந்தியா கேம்ஸ் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளன. விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு அடையவுள்ள உயரங்கள் இன்னும் அதிகமிருக்கிறது. அதில் உங்களுக்கான பங்களிப்பும் காத்திருக்கிறது. உயரிய ஊக்கத்தொகை பெற்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசுத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எம்.எஸ்.கே. ராஜேந்திரன்**
**டிசம்பர் 2 (1990)**



தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்.

இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர்.

இராமநாதபுரம் நகர மக்களின் பேரன்பிற்கும் பெருமரியாதைக்கும் உரியவர்.

அன்பும் அடக்கமும் பண்பும் பணிவும் கொண்டவர்.

“இரக்கமற்ற சாவே! அடுக்குமா உனக்கு” எனக் கேட்டு தலைவர் கலைஞரை கண்ணீர் விடச் செய்தது இவரது மறைவு.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனை - ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் பி.பழனியப்பன் அறிவிப்பு!



தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் மற்றும் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்த 887 வாக்குச்சாவடி முகவர்களுக்கான (பி.எல்.ஏ.-2) ஆலோசனைக் கூட்டம் கீழ்காணும் இடங்களில் அட்டவணையில் உள்ளவாறு நடைபெறும்.

இக்கூட்டத்தில் வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.-2) தேர்தல் பணி,டிசம்பர் 17 அன்றுசேலத்தில் நடைபெறும் 2வது இளைஞரணி மாநாடு, ‘நீட்’ விலக்கு கையெழுத்து மற்றும் இல்லந்தேடி இளைஞரணி உறுப்பினர்கள் சேர்த்தல் போன்ற கழக ஆக்கப் பணிகள் குறித்து கூட்டம் நடைபெற இருக்கிறது.

அட்டவணையில் உள்ளவாறு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய, பேரூர் கழ கசெயலாளர்கள், ஒன்றியத்திற்கான பொறுப்பாளர்கள், பேரூராட்சிக்கான பொறுப்பாளர்கள், மற்றும் பி.எல்.ஏ.-2 வாக்குச் சாவடி முகவர்கள், ஊராட்சி /பேரூராட்சி பாகங்களுக்கான பொறுப்பாளர்கள், மாவட்டக் கழகத்தால் நியமிக்கப்பட்ட மேற்பார்வையாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி

நாள் : 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை

தலைமை : எஸ்.எம்.அன்பழகன் (எ)அன்பு
தொகுதிபார்வையாளர்
தொண்டர் அணி,மாநிலதுணைசெயலாளர்

| வ.எண் | ஒன்றியம் | பாகங்கள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | தருமபுரிகிழக்கு | 55 | காலை 9.30மணி | ஸ்ரீனிவாசபெருமாள் திருமணமண்டபம் கடத்தூர். |
| 2 | தருமபுரிவடக்கு | 47 | | |
| 3 | கடத்தூர் மேற்கு | 45 | | |
| 4 | கடத்தூர் பேரூர் | 10 | | |
| 5 | தருமபுரிமேற்கு | 12 | | |
| | மொத்தம் | 169 | | |
| 6 | மொரப்பூர் மேற்கு | 4 | மதியம் 2.00 மணி | நாராயணசாமிகவுண்டர் திருமணமண்டபம், பாப்பிரெட்டிப்பட்டி |
| 7 | கடத்தூர் கிழக்கு | 40 | | |
| 8 | பாப்பிரெட்டிப்பட்டிமேற்கு | 44 | | |
| 9 | பாப்பிரெட்டிப்பட்டிகிழக்கு | 34 | | |
| 10 | பொ.மல்லாபுரம் பேரூர் | 12 | | |
| 11 | பாப்பிரெட்டிப்பட்டிபேரூர் | 9 | | |
| 12 | அரூர் மேற்கு | 2 | | |
| | மொத்தம் | 145 | | |

### அரூர் சட்டமன்றத் தொகுதி

நாள் : 04.12.2023 திங்கட்கிழமை

தலைமை : சேலம் ரா.தமிழரசன்,
தொகுதிபார்வையாளர்
மாணவர் அணி,மாநில துணைச் செயலாளர்.

| வ.எண் | ஒன்றியம் | பாகங்கள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | அரூர் கிழக்கு | 76 | காலை 9.30 மணி | கொங்குதிருமணமண்டபம் கோபிநாதம்பட்டி கூட்ரோடு |
| 2 | அரூர் மேற்கு | 50 | | |
| 3 | பாப்பிரெட்டிப்பட்டிகிழக்கு | 25 | | |
| 4 | கடத்தூர் கிழக்கு | 3 | | |
| | மொத்தம் | 154 | | |
| 6 | அரூர் வடக்கு | 45 | மதியம் 2.00 மணி | செந்தூர் மஹால் திருமணமண்டபம், பனந்தோப்பு |
| 7 | அரூர் பேரூர் | 26 | | |
| 8 | மொரப்பூர் கிழக்கு | 30 | | |
| 9 | மொரப்பூர் மேற்கு | 35 | | |
| 10 | கம்பைநல்லூர் பேரூர் | 11 | | |
| | மொத்தம் | 147 | | |

### பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி

நாள் : 05.12.2023 செவ்வாய்கிழமை

தலைமை : அ.தமிழ்மாறன்,
தொகுதிபார்வையாளர்
தகவல் தொழில்நுட்பஅணிதுணைச்செயலாளர்.

| வ.எண் | ஒன்றியம் | பாகங்கள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | பாலக்கோடுமேற்கு | 49 | காலை 9.30 மணி | வள்ளல் பாரிதிருமணமண்டபம், மாரண்டஅள்ளி. |
| 2 | பாலக்கோடுமத்தியம் | 70 | | |
| 3 | பாலக்கோடுபேரூர் | 16 | | |
| 4 | மாரண்டஅள்ளிபேரூர் | 8 | | |
| | மொத்தம் | 143 | | |
| 6 | காரிமங்கலம் மேற்கு | 54 | மதியம் 2.00 மணி | DSRதிருமணமண்டபம், காரிமங்கலம். |
| 7 | காரிமங்கலம் மத்தியம் | 27 | | |
| 8 | காரிமங்கலம் கிழக்கு | 36 | | |
| 9 | காரிமங்கலம் பேரூர் | 12 | | |
| | மொத்தம் | 129 | | |

**பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.

## புயல் தாக்கம்; 12 மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு

# நிவாரணப் பணிகளில் ஒருங்கிணைப்புத் தேவை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, டிச. 2 -**

**புயல் வெள்ளத் தாக்கம் குறித்து, சென்னை - தலைமைச் செயலகத்தில் நேற்று 12 மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு நடத்தி, அவர்களுக்கு வழிகாட்டுதலும் அறிவுரையும் வழங்கி உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "நிவாரணப் பணிகளில் அனைத்துத் துறையினருக்கும் இடையே நல்ல ஒருங்கிணைப்பு தேவை!" என்று குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (1.12.2023) தலைமைச் செயலகத்தில், வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்தும், வங்கக் கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 12 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

மீண்டும் அனைவருக்கும் வணக்கம்.

27.11.2023 அன்று உருவான காற்ற முத்த தாழ்வு பகுதி தற்போது தென் கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவுகிறது.இதனால் 3.12.2023, 4.12.2023 ஆகிய தேதிகளில், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கை!**

புயலின் தாக்கத்தை எதிர்கொள்ள பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

★ பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை வழங்கி, அவர்களை நிவாரண மையங்களில் தங்க வைக்க வேண்டும்.

★ நிவாரண முகாம்களில் உணவு, பாதுகாப்பான குடிநீர், மின்சார வசதி உட்பட தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் உள்ளதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

★ மழை, வெள்ள காலங்களில் மின் கசிவினால் ஏற்படும் விபத்துகளை தடுக்க மின்சார வாரியம் கட்டாயம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

★ புயலின் சீற்றம் காரணமாக மரங்கள் விழும் என்ற காரணத்தால், புயலின் போது விழக்கூடிய மரங்களை உடனடியாக அகற்றுவதற்கு குழுக்கள் போதிய உபகரணங்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

★ அரசு மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

★ மாவட்ட ஆட்சியர்கள், பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் பல்துறை மண்டல குழுக்களை முன் கூட்டியே நிலைநிறுத்த வேண்டும்.

★ பாதிப்பிற்குள்ளாகும் மக்களுக்கு உணவு வழங்கிட உணவு தயாரிக்கும் சமையல் கூடங்களையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

★ கனமழையின் போது, போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை நாம் காண்கிறோம். காவல் துறை இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, அதிக அளவில் போக்குவரத்து காவலர்களை ஈடுபடுத்தி, போக்குவரத்து நெரிசலை விரைந்து சரி செய்வதை உறுதி செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

★ இந்த மழைக்காலத்தில் மாவட்ட நிருவாகம், மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், இந்தத் துறைகள் எல்லாம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்று அறிவுறுத்திட விரும்புகிறேன்.

★ கடந்த ஒரு சில நாட்களுக்கு முன், மழைநீர் அதிகம் தேங்கிய பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தி, அங்கு தேங்கும் மழை நீரை அகற்ற அதிக அளவில் மோட்டார் பம்புகளை பயன்படுத்தி உடனடியாக அகற்ற வேண்டும்.

வங்கக் கடலில் உருவாகி உள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை திறம்பட எதிர் கொள்ளவும், பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய சிரமங்களைக் குறைத்திடவும், தேவையான அனைத்து முன்னெச்சரிக்கைநடவடிக்கைகளையும்அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன்.

மழைக்கால நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உங்களுக்கு குறிப்பான தேவைகளை உடனடியாக உங்கள் மாவட்டத்தின் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களுக்கு தெரிவித்திட கேட்டுக்கொள்கிறேன்.

அதனை அரசு உங்களுக்கு செய்து தரத் தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்து, இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வி.ராஜாராமன், பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் எஸ்.ஏ.ராமன், காவல்துறை கூடுதல் இயக்குநர் (ஆயுதப்படை) எச்.எம். ஜெயராம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (1.12.2023) தலைமைச் செயலகத்தில், வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்தும், வங்கக் கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 12 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வி. ராஜாராமன், பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் எஸ்.ஏ.ராமன், காவல்துறை கூடுதல் இயக்குநர் (ஆயுதப்படை) எச்.எம். ஜெயராம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## அயோத்திதாசப் பண்டிதரின் சிந்தனைகள்

# தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்பட்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - 'ட்விட்டர்' பதிவு!



**சென்னை, டிச. 2-**

**"திராவிடப் பேரொளி" அயோத்திதாசப் பண்டிதரின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம், கழக அரசின் சார்பில் சென்னை - கிண்டியில் அமைக்கப்பட்டு அதனை நேற்று தாம் திறந்து வைத்த நிகழ்வையொட்டி 'ட்விட்டர்' பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "புத்தரை 'இரவு பகலற்ற ஒளி' எனப் போற்றிய அயோத்திதாசப் பண்டிதரின் சிந்தனைகளும், அத்தகைய ஒளியாகத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படட்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் அப்பதிவு வருமாறு:-

தமிழன், திராவிடன் ஆகிய இரண்டையும் அரசியல்களத்தில் அடையாளச் சொற்களாக மாற்றிய 'திராவிடப் பேரொளி' அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திறந்து வைத்தேன்.

அயோத்திதாசரின் நூல்கள் நாட்டுடைமை.

ரூ.10 லட்சம் பரிவுத் தொகை வழங்கல்.

அயோத்திதாசர் அஞ்சல் தலை வெளியீடு.

அவர் நடத்திய தமிழன் இதழுக்கு நூற்றாண்டு விழா.

அவர் பெயரிலான சித்த மருத்துவ ஆராய்ச்சி மையத்துக்கு நிலம் ஆகியவற்றை நிறைவேற்றியது தி.மு.க ஆட்சியே!

ஆதி திராவிடர் குடியிருப்புகளை மேம்படுத்த "அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்" வரும் ஐந்தாண்டுகளில் 1000 கோடி ரூபாய் செலவில் நமது திராவிட மாடல் அரசால் செயல்படுத்தப்பட உள்ளது.

புத்தரை 'இரவு பகலற்ற ஒளி' எனப் போற்றிய பண்டிதரின் சிந்தனைகளும் அத்தகைய ஒளியாகத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படட்டும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6 அலுவலகத்தில் நேற்று (01.12.2023) முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பருவ மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அனைத்து துறை சார்ந்த உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 66 வது வட்டம் பாலாஜி நகர் பிரதான சாலையில் தேங்கியுள்ள மழை நீரை நேற்று இரவுக்குள் உடனடியாக super sucker , increasing Jet rodidng machine மோட்டார்கள் மூலம் நீரை அகற்றவும் மற்றும் அப்பகுதியில் நெடுஞ்சாலை துறை சார்பில் ஊழியர்களை அதிக அளவு பயன்படுத்தி சாலைகளை சீரமைத்துக் கொடுப்பது குறித்தும் மழை நீர் தேங்கிய 10 இடங்களில் நோய் தொற்று ஏற்படாமல் இருக்க மருத்துவ முகாம் நடத்துவது மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தில் மோட்டார் தொடர்ந்து இயக்குதல் மின்சாரத் தடை ஏற்படாமல் இருக்க அனைத்து முன் எச்சரிக்கை ஏற்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கே. ஜே.பிரவீன் குமார் RDC அவர்கள் மற்றும் கணேசன் RDC அவர்கள் மண்டலக்குழு தலைவர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

---

## சென்னை மாநகராட்சி மத்திய மண்டலத்தில்

# பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, டிச.2-*

*முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று (01.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6 அலுவலகத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாநகராட்சி, சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சுகாதாரத்துறை, மின்சாரத்துறை, நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்களுடன ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.*

*மழைநீர் தேங்காமல் உடனடியாக வெளியேற்றுதல், சேதமடைந்த சாலைகளை சீரமைத்தல், மழை நீர் தேங்கியிருந்த 21 இடங்களில் நோய்த் தொற்று ஏற்படாமல் இருக்க மருத்துவ முகாம்கள் நடத்துதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு அளித்தல், மின்சாரத் தடை ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்.*

*இக்கூட்டத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையர் கே.ஜே.பிரவீன் குமார், மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

---

# மிசோரம் வாக்கு எண்ணிக்கை: டிசம்பர் 4-ந் தேதிக்கு ஒத்திவைப்பு!

*மிசோரம்,டிச.2-*

*மிசோரமில் டிசம்பர் 3 ஆம் தேதி நடைபெறவிருந்த வாக்கு எண்ணிக்கையை டிச. 4 ஆம் தேதிக்கு இந்திய தேர்தல் ஆணையம் ஒத்திவைத்துள்ளது.*

*டிச. 3 அன்று மிசோரம் மக்களின் பண்டிகை தினம் என்பதால், தேதியை மாற்றக்கோரி பல்வேறு தரப்பிடம் இருந்து கோரிக்கை எழுந்ததால் வாக்கு எண்ணிக்கையை ஒத்திவைத்துள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*

*மொத்தம் 40 தொகுதிகளை கொண்ட மிசோரம் மாநிலத்தை மிசோ தேசிய முன்னணி ஆட்சி செய்து வருகின்றது. இம்மாநிலத்தின் 40 தொகுதிகளுக்கான சட்ட பேரவைத் தேர்தல், கடந்த நவம்பர் 7 அன்று ஒரே கட்டமாக நடத்தப்பட்டது.*

---

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!




---

## மதுரவாயல் - 92வது வட்டத்தில் மழை வெள்ள பாதிப்பு!

# காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு - நிவாரணம்!

### நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு! வட்டச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமை!

*சென்னை, டிச.2-*

*முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலில் மதுரவாயல் வடக்கு - 92வது வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மிக கனமழை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்குமதுரவாயல்சட்டமன்ற உறுப்பினர் காரம் பாக்கம் க .கணபதி மற்றும் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11வதுமண்டலகுழுதலைவருமானநொளம்பூர்வே.ராஜன், 92 வது வட்டச் செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம் ஆகியோர் மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆய்வு செய்து மழை நீர் வெளியேற்ற அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.*

*இந்த நிகழ்வில் பகுதி துணைச் செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ் எம்.சி. ஏழிலரசு ஏ.ஜி.வேலன் எம். பி.நவராஜ்எம்.என்.ராஜ்கமல் எம்.எஸ்.சந்தானம் எம்.எஸ். தமிழ்அழகன்வி.ஆர்.மகேந்திரன் எம்.பி.நவசுந்தர். எம். டி.ராஜ்உள்ளிட்டகழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம், வார்டு84, சென்ட்ரல் அவென்யூ TNHB 2வது தெருவில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றும் பணிகளை துணை மேயர் மு.மகேஷ்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி, மண்டல அலுவலர் திருமதி. விஜலோ, உதவிபொறியாளர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (01.12.2023) சென்னை, ஐ.டி.சி. கிராண்ட் சோழா ஹோட்டலில் நடைபெற்ற சர்வதேச, தேசிய மற்றும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கும் விழாவில் ரூ.5.28 கோடி மதிப்பில் 231 வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, உடனிருந்தனர்.



உதகையில் நடைபெற உள்ள இளைஞர் அணியின் செயல்வீரர்கள் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிட நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்த இளைஞர் அணி செயலாளரும். தமிழக விளையாட்டு துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்க துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நீலகிரிமாவட்ட கழகத்தின் சார்பில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. குன்னூர் லெவல் கிராசிங் பகுதியில் மாவட்ட கழக செயலாளர் பா மு. முபாரக் தலைமையில் குன்னூர் நகர கழகத்தின் சார்பிலும். எல்லநள்ளி பகுதியில் மேலூர் ஒன்றிய கழகத்தின் சார்பில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. அலை அலையாக கூடிய மக்கள் கூட்டம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். மீது மலர்தூவி வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து உதகை யில் வரவேற்பை பெற்று தமிழக விருந்தினர் மாளிகை யில் நடைப்பெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அருணா மலர் செண்டு கொடுத்து வரவேற்றார்.

### சென்னையில் 100 முகாம்கள்!

# தமிழ்நாடு முழுவதும் 2000 சிறப்பு மருத்துவ முகாம்கள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை!

சென்னை, டிச.2-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் 02.12.2023 அன்று மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் 2000 இடங்களிலும், அதில் 100 முகாம் பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற உள்ளது. மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீடு முகாம் 02.12.2023 அன்று தமிழ்நாடு முழுவதும் 100 இடங்களில் நடைபெறும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே மக்கள் நல்வாழ்வுத் துறையும், உள்ளாட்சி அமைப்புகளும் ஒருங்கிணைந்து மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கடந்த 23.10.2023 தொடங்கி



தற்போது வரை வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும் முகாம் 1000 என்று அறிவிக்கப்பட்டு

2000த்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடைபெறுகிறது. அந்த வகையில் கடந்த 5 வாரங்களில் இதுவரை 10,576 முகாம்கள் நடைபெற்று, அதில் 5,21,853 பேர் பங்கேற்று பயன் பெற்றுள்ளனர்.

மழைப்பொழிவு அதிகமாக உள்ள காரணத்தினால் முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி நாளை 02.12.2023 அன்று மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் 2000 இடங்களில் காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் அனைவரும் பங்கேற்று பரிசோதனை மேற்கொண்டு மழைக்கால நோய்களிடமிருந்து தங்களை தற்காத்து கொள்ள வேண்டும்.

**முதலமைச்சரின் மருத்துவக் காப்பீடு முகாம்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2009ஆம் ஆண்டு ஜீலை 23ஆம் நாள் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தில் இதுவரை 1 கோடியே 45 இலட்சம் குடும்பங்கள் மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்திற்கான அட்டையினை பெற்று இருக்கிறார்கள்.

இன்று (02.12.2023) சனிக்கிழமை அன்று தமிழ்நாடு முழுவதும் 100 இடங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை காப்பீடு முகாம் நடைபெற உள்ளது. புதியதாக திருமணம் ஆனவர்கள், விடுபட்ட குடும்பத்தினர்கள் போன்றோர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தில் இணைப்பதற்கு ஏதுவாக கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதிலும் 100 இடங்களில் முகாம் நடைபெற இருக்கிறது. அதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளான இராயபுரம், அடையார், மயிலாப்பூர், அயனாவரம், நீலாங்கரை உள்ளிட்ட 5 இடங்களில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு முகாம் நடைபெற உள்ளது. அதில் இராயபுரம் மற்றும் நீலாங்கரை ஆகிய இடங்களில் நடைபெறும் முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ள உள்ளேன். அந்த வகையில் பொதுமக்கள் நடைபெறும் காப்பீட்டு முகாம்களில் பங்கேற்று தங்களுக்குரிய காப்பீடு அட்டையினை பெற்று பயன்பெற வேண்டும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அம்பத்தூர் வடக்குப் பகுதி

# 86வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு - திருச்சி சிவா எம்.பி., சு.வெங்கடேசன் எம்.பி. சிறப்புரை!

சென்னை, டிச. 2 -

அம்பத்தூர் வடக்குப் பகுதி 86 வது வட்டத்தில் இன்று (2.12.2023) மாலை 6 மணியளவில் அம்பத்தூர் தொழிற்பேட்டை மேனாம்பேடு சாலை பேருந்து நிலையம் அருகில் வட்டச் செயலாளர் எம்.கமல் தலைமையில் கலைஞர் நூற்றாண்டு விழா போற்றுவோம் கலைஞர் புகழை:

ஏற்றுவோம் அவரின் சுடரை என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

கழகப் பொருளாளர் - நாடாளுமன்றக் கழகக் குழு தலைவர் டி.ஆர். பாலு, அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கின்றனர்.

திருச்சி என்.சிவா எம்.பி., மதுரை சு.வெங்கடேசன் எம்பி. சிறப்புரை ஆற்றுகின்றனர்.

மேயர் பிரியா ராஜன், பா.தாயகம் கவி எம்.எல்.ஏ., ஆ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. டி.எஸ். பி.ராஜகோபால், பி.கே. மூர்த்தி, எம்.டி.ஆர்.நாகராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சு.ஞானசேகரன், வி.மைக்கேல் ஜெபராஜ், ஏ.ஆதம் நன்றி கூறுகின்றனர்.

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் துவக்கி வைக்கிறார்! இன்று

# மிசா. ம.ஆபிரகாம் 36-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி அமைதி ஊர்வலம்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.-அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

சென்னை, டிச.2

ஆலந்தூர் நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரும்புத்தூண் என்று தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவரும், ஆலந்தூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மிசா ம.ஆபிரகாம் அவர்களின் 36-ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று!

மிசா. ம.ஆபிரகாம் நினைவு அஞ்சலி அமைதி ஊர்வலம் இன்று (2.12.2023-சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில், ஆலந்தூர் - அப்பாவு தெருவில் உள்ள அவருடைய இல்லத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, பட்ரோடு கல்லறை வரை அமைதி ஊர்வலம் நடைபெறுகிறது.

அமைதி ஊர்வலத்தை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் துவக்கி வைக்கிறார்.

இந்த அமைதி ஊர்வலத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என்.சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.கே.இப்ராகிம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர். டி.பூபாலன், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இந்நிகழ்வில் வடக்கு-தெற்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி-வட்ட அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், பொதுமக்கள் ஆகியோர் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு ஆலந்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 37 வது வார்டு அரசு உதவி பெறும் ஆரம்ப பள்ளியில் பகுதி கழக செயலாளர் ஜி.நாராயண பிரசாந்த் தலைமையில் வட்ட கழக செயலாளர் பார்த்திபன் ஏற்பாட்டில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ பள்ளி குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி. உதயகுமார் ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பொது குழு உறுப்பினர் ஜி.விமல் வர்ஷன் மாவட்டம் இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார், பகுதி அவைத் தலைவர் துரை ராஜ், மாநகர பிரதிநிதி நரேன், வட்ட செயலாளர் பன்னீர் செல்வம் மாமன்ற உறுப்பினர்கள் ரமேஷ், டாக்டர் ராஜேஷ்குமார், உள்பட பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன், எம்.பி. முன்னிலை! - ப.விஷ்ணு சக்கரவர்த்தி - தலைமை!

# துறைமுகம் கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் - மாபெரும் இரத்ததான முகாம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் முகாமை துவக்கி வைக்கின்றார்!

சென்னை, டிச.2-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாள், உதயம் -6 நிகழ்ச்சியாக "உயிரைக் காக்க குருதி கொடுப்போம்! உதயத்தின் வழியில் உறுதியெடுப்போம்! எனும் தலைப்பில் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.00 மணியளவில், சென்னை, பிராட்வே, பிடாரியார் கோயில் தெரு, சகாய மாதா ஹாலில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் இரத்ததான முகாமில் பகுதி துணை அமைப்பாளர், துறைமுகம் பகுதி இளைஞர் அணி ப. விஷ்ணு சக்கரவர்த்தி தலைமை வகிக்கின்றார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் - விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர், தயாநிதிமாறன் எம்.பி., வணக்கத்திற்குரிய சென்னை பெருநகர மாநகராட்சி மேயர். பிரியா ராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ., பி.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., துறைமுகம் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: ராஜேஷ் ஜெயின் எம்.சி., தாஹா எல்.நவீன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும் இரத்ததான முகாமை மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் துவக்கி வைக்கின்றார்.

மேலும், இவ்விரத்த தான முகாமில் வி.எல். யஷ்வந்த், எம்.எஸ்.அசாருதீன், அ.சுமன்ரா, டி. பில்ப்ஸ்,பி.செந்தில்குமார், கே.பாலாஜி, எஸ்.இம்ரான்கான், நா.மோகன், கே.சூர்யபிரகாஷ், அ.திருப்பதி, அ.ஆனந்த், எம்.சண்முகசுந்தரம். மாவட்ட துணை அமைப்பாளர்கள்-இளைஞரணி: ஜெ.பாலமுருகன், க.வினோத், ஜி.ஜே.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா. துறைமுகம் கிழக்கு/மேற்கு வட்ட கழகசெயலாளர்கள்: கே.கவியரசு, எஸ்.புகழேந்தி, எம். பரத்குமார், ஐ.நா.பார்த்திபன், எல்.சத்தியநாராயணன், ஆர்.ஏ.அஸ்லாம், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி , பா.அண்ணாதுரை, சேப்பாக்கம் வே. பிரபாகரன், டி.சதீஷ் குமார். துறைமுகம் கிழக்கு / மேற்கு பகுதி கழக நிர்வாகிகள்: ந.சுந்தரம், எஸ். சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், மே.ஜனார்தனன், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துகுமார். இளைஞரணி வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்: எஸ்.பி.சீனிவாசன், எஸ். வினோத்கமார், அ. பாலாஜி, பி.மணிகண்டன், க.நரேஷ், மா.ராஜேஷ், எம்.அருண்குமார், எம். மணிகண்டன், பா.அஜித் குமார், வி.கோபால், ஆர். மணிரத்னம், எஸ்.ராஜி, எம்.கன்னியப்பன், வி. கோபிகிருஷ்ணன், எஸ். சுமேஷ், யு.தீபக். எம்.தரணிகமார், ஆர்.கார்த்திக் ஜோதி, எம்.யுவராஜ் லோகேஷ், டி.சரத்குமார், அ.அருண்குமார். டி. ராஜேஷ், ஆர்.ராம், எஸ். விஜயகுமார், ஆர்.கே. பாலாஜி, எம்.உதயா, எஸ். முருகன், சி.அர்ஜீன்சிங், சி.ராஜா, சி.கார்த்திகேயன், எஸ்.ராஜேந்திரன், மே.டில்லிபாபு, எம்.லோகவீரன், எஸ். சையத்தாவார் அலி, எஸ்.முரளிதரன், கே.நாராயணன், எம். தமிம்பாஷா, பி.வினோத் குமார், அ.லியாகாத்அலி, எஸ்.ராஜ்குமார், எம். வசந்த்குமார், கே.சூர்யா நசீர், பி.அரவிந்த்சாமி, க. முருகன், ச. முகமது ஜான், பி.எம்.பிரகாஷ், ரா.ஜிவா, எஸ்.கே.பைசல், ஆர்.பரத், ஆர்.வெங்கடேஷ், டி.முகமது ஜலில், அ.பாலாஜி, பி.மோகரூபன், என்.கமல், எம்.சாதிக் உசேன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். சிறப்பிக்கின்றனர்.

56வது வட்ட கழக செயலாளர்கள் வெ.பரிமளம், த.ராஜா(எ) கதிரவன் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

### சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி மாநில மாநாட்டை யொட்டி

### காஞ்சி வடக்கு மாவட்டத்தில் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக

# வார்டு - கிளைக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் - பூத் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



வருகிற டிசம்பர் 17-ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநில மாநாட்டில் இளைஞர் அணியினர் பெருந்திரளாக கலந்துக்கொள்வது சம்மந்தமாகவும், வாக்குச்சாவடி வாரியாக வழங்கப்பட்டுள்ள குடும்ப விவர OMR படிவம் மற்றும் வீட்டு கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்வது சம்மந்தமாகவும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக கிளைக் கழக - வார்டு கழக இளைஞர் அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2), பூத் அளவில் போடப்பட்டுள்ள இளைஞர் அணி - தகவல் தொழில்நுட்ப அணி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட தேதிகளில், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி நடைபெற உள்ளது.

| நாள் | நேரம் | பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் |
|---|---|---|
| 5.12.2023 செவ்வாய் | காலை 9 மணி | திருப்போரூர் வடக்கு – தெற்கு ஒன்றியம், திருப்போரூர் பேரூர் |
| | பகல் 11 மணி | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் – பேரூர் மற்றும் மாமல்லபுரம் நகரம் |
| | பிற்பகல் 3 மணி | காட்டாங்குளத்தூர் வடக்கு – தெற்கு ஒன்றியம் |
| 6.12.2023 புதன் | பகல் 12 மணி | திருப்பெரும்புதூர் வடக்கு – தெற்கு ஒன்றியம், திருப்பெரும்புதூர் பேரூர் |
| | பிற்பகல் 3 மணி | குன்றத்தூர் நகரம் |
| | மாலை 5 மணி | குன்றத்தூர் வடக்கு – தெற்கு ஒன்றியம் |
| | மாலை 7 மணி | மாங்காடு நகரம் |
| 7.12.2023 வியாழன் | மாலை 3 மணி | பம்மல் வடக்கு – தெற்கு பகுதி |
| | மாலை 5 மணி | பல்லாவரம் வடக்கு – தெற்கு பகுதி, செம்பாக்கம் வடக்கு பகுதி |
| | மாலை 7மணி | ஆலந்தூர் வடக்கு – தெற்கு பகுதி– கண்டோன்மெண்ட் நகரம் |
| 8.12.2023 வெள்ளி | காலை 9 மணி | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகரம் |
| | பகல் 11 மணி | மறைமலைநகர் நகரம் |
| | பிற்பகல் 3மணி | செங்கல்பட்டு நகரம் |
| | மாலை 5 மணி | செம்பாக்கம் தெற்கு பகுதி – தாம்பரம் கிழக்கு பகுதி – பெருங்களத்தூர் தெற்கு பகுதி |
| | மாலை 7 மணி | புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம் |

அந்தந்த பகுதி-ஒன்றிய-நகர-பேரூர் செயலாளர்கள் இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு இக்கூட்டங்களில்பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக நிர்வாகிகள் - வார்டு - கிளைக் கழகச் செயலாளர்கள் -இளைஞர் அணி நிர்வாகிகள் - அந்தந்த வாக்குச்சாவடிகளில் அடங்கியுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2), வாக்குச்சாவடி இளைஞர் அணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் முறையாக அழைப்பிதழ் தந்து இக்கூட்டத்தில் அவர்கள் அனைவரையும் பங்கேற்கச் செய்ய உரிய ஏற்பாடுகளை செய்திடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : டிசம்பர் - 17 அன்று சேலத்தில் நடைபெற உள்ள மாநில மாநாட்டில் இளைஞர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்பது குறித்து

பூத் வாரியாக வழங்கப்பட்டுள்ள குடும்ப விவர OMR படிவம் மற்றும் வீட்டு கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்வது குறித்து

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் உத்தரவு பேரில் திருவள்ளூர் அடுத்த பெரியகுப்பத்தில் உள்ள அன்னை தெரேசா பள்ளியில் பயிலும் மனவளர்ச்சி குன்றிய மற்றும் காது கேளாத, வாய் பேசாத மாணவ, மாணவிகளுக்கும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆணழகன் டி.ஆர்.திலீபன் ஏற்பாட்டில் நகரக் கழக செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் பிரியாணி மற்றும் இனிப்பு வழங்கினார். உடன் முன்னாள் நகர மன்ற தலைவர் பொன்.பாண்டியன், ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன், நகர கழக நிர்வாகிகள் தி.ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி என்.பரசுராமன், ராஜேஸ்வரி கைலாசம், இ.குப்பன், டி.சிவகுமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ம.புவனேஷ்குமார், சி.சு.விஜயகுமார், வி.எஸ்.நேதாஜி, ஜி.கோவிந்தம்மாள், கு.பிரபாகரன், ஆ.பவளவண்ணன், பாஸ்கர்(எ)பார்த்திபன், கொப்பூர் திலீப்குமார், மோகனசுந்தரம், குதிரை நந்தகுமார், வீனஸ், வேளாங்கண்ணி, தமிழரசி, மோகன், சசிக்குமார் உள்பட பலர் உள்ளனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நமக்கெல்லாம் பொக்கிஷம்!



திமு.க.வின் நல்ல துடிப்பான இளந்தாரி பய புள்ள ஒன்னுத்துக்கிட்ட நான் வசமா நேத்து மாட்டிக்கிட்டேன்..!

நீங்களே சொல்லுங்கண்ணே... இது நியாயமாண்ணே...?! சென்னைல ஒரு வாரமா மழை வச்சு செய்யுது, உண்மை தான். ஆனால் பழைய மாதிரி இல்லாம, இப்ப மிகப் பெரும்பான்மையான இடங்கள்ல தண்ணி தேங்காம வடிகால் வழியா ஓடிடுது.

ஆனாலும் நம்ம சின்னவர் இருக்கார், மேயர் இருக்காங்க... சென்னைல இருக்கிற ஆற்றல் மிகு அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் எல்லாருமே களத்துல நின்னு... ஒட்டு மொத்த மாநகர நிர்வாகமும் மிகச் சிறப்பா தங்கள் பணிகளை செய்யுறாங்க...

அப்புறம் என்னா தம்பி உனக்கு பிரச்சினை..?! நீ ஏதோ ஆட்சி பற்றி குறை சொல்லப் போறியோன்னு கெதக்குன்னு ஆகிப் போச்சு...

அண்ணே குறைதான் சொல்லப் போறேன்... நம்ம ஆட்சியைப் பத்தி இல்ல... ஆனா நம்ம தலைவரைப் பற்றி...!

ஏய் என்னப்பா சொல்ற...?!

ஏண்ணே... தலைவருக்கு லைட்டா உடல் சுகமில்லை, கொஞ்ச நாள் ஓய்வு எடுக்கணும்ன்னு டாக்டர்லாம் சொல்லியிருக்காங்கன்னு அவரே சொன்னாருல்ல...?!

இப்ப சென்னைல மழை வந்தோடுன, வேட்டிய மாத்தி பேண்ட்டை மாட்டிக்கிட்டு குடைய பிடிச்சிக்கிட்டு மழைல வந்து ரோட்டுல நின்னு ஆய்வு பண்ணினா என்னண்ணே அர்த்தம்..?!

அவர் நமக்கெல்லாம் பொக்கிஷம் மாதிரி தானே..?! எல்லாமே அவர் ஆட்சில சிறப்பா நடக்கும் போது, அவரும் வந்து நின்னுதான் ஆகணுமா..?! அதான்ணே எனக்கு கோவம் கோவமா வருது..!

தம்பி நீ சொன்னதுல பாதிதான் உண்மை... அவர் நமக்கும் நம்ம இயக்கத்துக்கும் மட்டும் பொக்கிஷம் இல்லை.... மாறாக அவர் நம்ம தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் பொக்கிஷம் தான்...! இன்னும் சொல்லப் போனால் வருங்காலத்தில் ஒட்டுமொத்த இந்தியாவுக்கே அவர்தான் பொக்கிஷமாக மாறப் போகின்றார்..!

அப்பறம் என்னாண்ணே... அவர் தன்னோட உடம்ப பத்திரமா டாக்டர்கள் சொல்றத கேட்டு பாத்துக்க வேணாமா..?!

உன் ஆதங்கம் சரியானது தான் தம்பி... ஆனா அவரோட உடம்புக்கும், மனதுக்குமான மருந்தே இது தான் தம்பி. மக்களுக்கு ஒரு இடர்ப்பாடுன்னா, அங்கேதான் போய் நின்னு முதல் பணியாளரா வேலை செய்து, சம்பந்தப்பட்ட அனைவரையும் ஒருங்கிணைத்து, தட்டிக் கொடுத்து, உற்சாகப்படுத்தி, உத்தரவுகளை பிறப்பித்து, பத்து மடங்கு கூடுதல் வேகத்துடன் வேலையை முடுக்கி விட்டு... மக்களை எந்த இயற்கை பேரிடரும் நெருங்கிடா வண்ணம் பாதுகாத்து மக்களின் காவலனாக... குலசாமி போல நிக்குறாரே அதுதான் தம்பி அவருக்கான மருந்து..!

நீ கவலையே பட வேண்டாம் தம்பி. இந்த மழையால் மக்கள் எவரும் பாதிப்படையவில்லை என்ற நிலை உருவானாலே அவர் உற்சாகமாகி விடுவார்... இன்னும் கூடுதலாக உழைக்க ஆரம்பித்துவிடுவார். அவர் உடல் சுகவினங்கள் எல்லாம் பஞ்சாய் பறந்து விடும்..!

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக சென்னையில் தொடர்ந்து வசிப்பவர்களாக இருந்தால்.... அவர்கள் அனைவருக்கும் ஒரு விஷயம் நன்றாகத் தெரிந்திருக்கும்..!

தலைவர் தளபதியார் அவர்கள், சென்னையில் இது மாதிரியான இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படும் நேரங்களில் எல்லாம்...

ஒரு இளைஞரணி தலைவனாகவோ... ஒரு சட்டமன்ற உறுப்பினராகவோ... ஒரு மேயராகவோ... ஒரு உள்ளாட்சித் துறை அமைச்சராகவோ... ஒரு துணை முதல்வராகவோ... ஒரு எதிர்க்கட்சி தலைவராகவோ....

அவரது களப்பணிகள் மிகச் சிறப்பானதாக இருக்கும்..! எங்கே அதிக பிரச்சினை வருகின்றதோ, முதல் நபராக அவர்தான் போய் அங்கே நிற்பார்..! அவர் எந்தப் பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அந்தந்த பகுதி மக்கள் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் அங்கே வந்து பணிகளை விரைவாக செய்து முடிக்க வேண்டிய கட்டாயம் அமைந்தே தீரும்..!

ஆனால் இப்பொழுதோ... தன் கரங்களில் அனைத்து அதிகாரங்களும் இருக்கக் கூடிய தமிழ்நாடு முதலமைச்சராகவே அவர் இருக்கின்றார். அதனால் தான்...

பழைய சென்னை போல் இல்லாமல்... கடந்த இரண்டு ஆண்டுகளில் வடிகால்களை மிகப் பெரிய அளவில்... உலகத் தரத்தில் கட்டமைத்து வருகின்றார். தனது இரண்டரை ஆண்டு கால ஆட்சியில் 8 மாதங்கள் கொரானாவோடு போராடியே கழிந்து விட்ட நிலையில்...



**சௌமியன் வைத்தியநாதன்**
**எழுத்தாளர்**

மீதமிருந்த காலகட்டத்தில்... சென்னையின் வடிகால் வசதிகளை 70 சதவிகிதத்திற்கும் அதிகமாக முடித்து விட்டிருக்கின்றார். அடுத்த மழைக் காலத்திற்குள் கிட்டத்தட்ட அந்த பணிகள் முழுமையாகவே முடிந்து விட்டிருக்கும்.

ஆகவே தான் இப்பொழுது கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலங்களில் இருந்தது போல...

சென்னையில் உள்ள எந்தச் சுரங்கப்பாதையிலும் பெரு மழை நேரத்திலும் நீர் தேங்கவில்லை. சென்னையின் இருதயமாக திகழக் கூடிய தியாகராய நகர் உள்ளிட்ட அதனைச் சுற்றியுள்ள எந்த பகுதியும் மழை நீரில் மிதக்கவில்லை..!

வடசென்னை புளியந்தோப்பு பகுதிகளில் கூட இந்தாண்டு மழைநீர் தேங்கவில்லை. எல்லா இடத்திலும் தண்ணீர் புகுந்து, லட்சக் கணக்கான மக்கள் பல நாட்கள் முகாம்களில் தங்க வைக்கப்படவில்லை.

எந்த சமூக இயக்கங்களுக்கோ, எதிர்க் கட்சிகளுக்கோ... மக்களுக்குப் போட் சேவையும், உணவு தான சேவையும் செய்யும் அவசியம் ஏற்படவில்லை.

முன்பெல்லாம் ஊடகங்களில் சென்னையின் மழைக்காலம் என்றாலே, தங்கள் அலுவலக ஜன்னலை திறந்து சுற்றியுள்ள பகுதிகளை வீடியோ எடுத்து, சென்னையின் நிலவரத்தை உலகிற்குக் காட்டி வந்த நிலை மாறி...

இப்பொழுது மழை நேரத்தில் சென்னையில் மழை நீர் தேங்கியிருக்கும் காட்சியை காட்டுவதற்காக மெரினா கடற்கரைக்குச் சென்று கிழக்குப் பக்கமாக கேமராவை திருப்பிக்காட்ட வேண்டிய நிலையை நம் தலைவர் உருவாக்கியிருக்கின்றார்..!

இன்னும் கூட அவரது கனவு நிறைவேறி விட்டதாக அவர் நினைக்கவில்லை. சென்னையின் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள், சாலைகள் அகலப்படுத்தும் பணிகள், பறக்கும் சாலைகள் திட்டங்கள் அனைத்தையும் இந்த வடிகால் திட்டத்தோடு இன்னும் ஒன்னரை ஆண்டுகளில் முடிக்க வேண்டும் என்ற கனவுதான் அது.

தலைவர் தளபதியார் அவர்கள், ஒரு நிர்வாகியாக தனக்குத் தானே இரண்டு இலக்குகளை நிர்ணயம் செய்து கொள்வார். ஒன்று... ஒரு திட்டத்திற்கான செலவை, திட்ட மதிப்பீட்டினை விட குறைவான செலவிலேயே செய்து முடிப்பது. இரண்டாவது... திட்டத்திற்கான கால மதிப்பீட்டிற்கு முன்னதாகவே அதை முடித்துக் கொடுப்பது..!

காலத்தை முன்னதாகவே முடித்து விட்டால் அதன் செலவையும் கட்டுப்படுத்தி விடலாம். அதற்கு அவர் தேர்ந்தெடுத்த முறைதான்... தான் செயல்படுத்தவிருக்கும் திட்டங்களை, நேரம் காலம் பார்க்காமல், தானே நேரில் சென்று அடிக்கடி ஆய்வு செய்வது என்பதாகும்.

அப்படி ஆய்வுகளுக்குச் செல்வதால், எந்தத் திட்டப்பணியும் எந்தக் காரணத்திற்காகவும் ஒரு நாள் கூட தடையின்றி வேகமாக முடிக்கப்பட்டுவிடும். உத்தரவுகள், கிளியரன்ஸ் போன்றவை உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு... வேகமாகப் பணிகளை முன்னெடுக்கும் ஒப்பந்ததாரர்களுக்கு அனைவர் மத்தியிலும் தங்க சங்கிலிகள் அணிவித்து அவர் உற்சாகப்படுத்திய சம்பவங்கள் ஏராளமாக உண்டு..!

அதன் காரணமாகவே சென்னையில் கட்டப்பட்ட மேம்பாலங்கள் ஆகட்டும், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட மிக நீளமான பாலங்கள் ஆகட்டும்... அவற்றிலெல்லாம் அவரது அடையாளங்களை எவராலும் அழிக்க முடியாது..!

அதே போன்று தான், இன்னும் ஒன்னரை அல்லது இரண்டு ஆண்டுகளில் சென்னையை அவர் நவீனமயப்படுத்தியே தீருவார். இந்திய ஒன்றியத்தின் மற்ற மாநிலங்களின் தேர்தல் காலத்தில்... கட்சிகள் அனைத்தும் சென்னை மாநகர தரத்திற்கு இணையாக தங்கள் மாநில தலைநகரை உயர்த்துவோம் என்று தேர்தல் வாக்குறுதி அளிக்கும் நிலையை உருவாக்கியே தீருவார்..!

அவருக்குத் தேவை எல்லாம் பெரும் பணமோ... புகழோ கூட இல்லை..! சிங்கப்பூரின் சிற்பி லீகுவான்யூ போல... தன் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டை உலக நாடுகளுக்கு இணையாக... உட்கட்டமைப்பு, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் இப்படி அனைத்திலும் தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாற்ற வேண்டும் என்பதே..!

ஆகவே சென்னையர்களே... வாருங்கள் நம்ம தலைவர் ஸ்டாலினோடு கைகோர்த்த படியே பயணிப்போம்...!

# பாறைகள் சரியும் காலம்! மானுடம் நிமிரும் காலம்!!

## ‘கணையாழி’ தலையங்கம்!

வடக்கே மண் பாறை சரிவிலிருந்து தொழிலாளர்களின் மீட்டெடுப்பு!

இங்கே மனுதர்ம சரிவிலிருந்து மானுடத்தை மீட்டெடுக்க உதவிய மண்டல் நாயகருக்கு மாநிலக் கல்லூரி வளாகத்தில் சிலை திறப்பு!

ரிஷிகேஷ், ஹரிதார், கேதார்நாத். பத்ரிநாத் கங்கோத்ரி, யமுனோத்ரி அடங்கிய தேவ பூமி! என்றெல்லாம் கொண்டாடப்படும் உத்தரகண்ட் சுரங்கப் பாதையில் மண் பாறை சரிவு!

உத்தரகண்ட் இந்தியாவின் 27 ஆவது மாநிலம் இமயமலையின் நிலப்பரப்பு!

"எல்லா மக்களின் நலன்களையும் பேணுவதைத் தவிர வேறு முக்கிய வேலை எனக்குக் கிடையாது." என்று உறுதி கூறிய மாமன்னன் அசோகன் கட்டளைக் கல்வெட்டும் இருக்கும் இடம்!

அங்கேதான் நடந்திருக்கிறது மண்பாறை நிலச்சரிவு! இது முதல்முறை அல்லவாம்! மண் சரிவு, பாறைச்சரிவு நிலச்சரிவு மட்டுமின்றி பனிச்சரிவும் அங்கே நடக்குமாம்!

இரண்டு கிலோ மீட்டர் உயரத்திலிருந்து இமயமலையின் பனிப்பாறை ஒரு நிமிட சரிவில் 2021 இல் பெயர்ந்து விழுந்த வேகம் ஹிரோஷிமா அணுகுண்டு வேகத்தைவிட அதிகமாம்!

மோதிய வேகத்தில் ஏற்பட்ட வெப்பத்தில் உருகிப் பெருகி ஓடிவந்த வெள்ளம் அடித்துக் கொண்டு போயிருக்கிறது 204 மனிதர்களின் உயிர்களையும்! நல்ல வேளை இப்போது 41 தொழிலாளர்களும் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள்!



ம.ரா.

அவர்கள் காப்பாற்றப்பட்ட செய்தியை உலகிற்கு முதலில் அறிவித்தவர் பொறியாளர் சந்திரன் என்ற தமிழ்நாட்டுக்காரர்!

சுரங்க மண்சரிவில் சிக்கியிருந்தவர்களில் ஒருவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் இல்லை.

ஆனால் அவர்கள் உயிரோடு இருக்க உணவு, குடிநீர், மருந்து, மாத்திரையும் நம்பிக்கை இழக்காமல் இருக்க மின்சாரம். மின்னேற்றி,கேமராவும் உள்ளே அனுப்ப உதவியிருப்பது திருச்செங்கோட்டில் உள்ள தரணி ஜியோ டெக் நிறுவனம்!

இப்போது வெளியில் வந்துவிட்டார்கள்! இங்கிருந்தே சந்திராயனை நிலாவில் இறக்கும் தொழில்நுட்ப இந்தியாவில் சுரங்கத்தில் சிக்கிக் கொண்டவர்களைக் கரையேற்ற 17 நாட்கள்!

ஆயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள இடத்தைக் குறிவைத்து அழிக்க அனுப்பும் ஏவுகணை தொழில்நுட்பம் படுகுழியில் சிக்கிக்கொண்ட தொழிலாளர்களை மீட்டெடுக்கும் பயன்பாடு எப்போது வரும்?

எப்படியோ வெளிவந்துவிட்டார்கள்! ஆனாலும் சுரங்கத்திலிருந்து வெளியில் வந்து விடுகிற மூச்சில் இன்னும் கூட அவர்களின் மனச் சரிவின் வெளிப்பாடு!

எவ்வளவு மன உளைச்சலில் இருந்திருப்பார்கள்? குடும்பத்தை மீண்டும் காண முடியுமா? என்ற பதற்றத்தில் அவர்களின் குடும்பமும் இருந்திருக்குமே!

துரத்தும் பயத்தில் தூங்க முடியாமல் நினைவாற்றல் குறைந்து முடிவெடுக்க முடியாமல் இனிவரும் காலங்களையும் எப்படி நகர்த்தப் போகிறார்கள்?

பயம் இல்லாமல் இரவு வானத்தைப் பார்க்க முடிய வேண்டும்! கண் சிமிட்டும் நட்சத்திரங்களும் சரிந்து விழும் பாறைத்துளிகள் என்று பதறாமல் இருக்க வேண்டும்! இயல்பு நிலைக்கு வர இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும்? பயத்திலிருந்து விடுபட ஓடி ஒளிய நினைத்தால் அது விடாது துரத்தும்!

தமிழ்நாட்டு முதல்வரைப் போல நேருக்கு நேராகச் சந்திக்கத் துணிந்தால் அது ஓட்டம் பிடிக்கும்!

சந்திக்கத் துணிந்த மண்டல் நாயகர் வி.பி.சிங். சிலையை மாண்புமிகு முதலமைச்சர் திறந்துவைத்திருக்கிறார்!

எதிர்பாரா விபத்தில் பதினேழு நாட்கள் படுகுழியில் இருந்தவர்கள் இயல்பு நிலைக்கு வரவே இவ்வளவு பிரச்சினைகள்!

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் படுகுழியில் கிடத்தப்பட்டிருந்த மக்கள் மனநிலையை மாற்றி, மீட்டெடுக்கப் பாடுபட்ட கலைஞருக்கு. வடக்கிலிருந்து கைகொடுத்த வி.பி.சிங் குக்குத் தமிழகத்தில் சிலை எடுத்து மானுட நேயத்திற்கு மகுடம் சூட்டி இருக்கிறார் தமிழ்நாட்டு முதல்வர்!

மக்களை அச்சுறுத்தும். அரசாங்கம் மாறி மக்களுக்கு அஞ்சும் அரசாங்கம் உருவாகும் காலம் இது!

கால மாற்றத்தில் இமயமலைப் பாறைகளும் சரிந்து விழுகின்றன! ஆனால் தாமதம் ஆனாலும் பாதகப் படுகுழியிலிருந்து போராடி வெளிவருகிறது மானுட நேயம்!

அதன் குறியீடுதான் மணடல் நாயகர் சிலை திறப்பு!

ஆம்! இது பாறைகள் சரியும் காலம்! மானுடம் நிமிரும் காலம்!!

நன்றி
கணையாழி
டிசம்பர் – 2023

### சிதம்பரம் நடராஜர் திருக்கோயில் அனுமதி பெறாமல்

## தீட்சிதர்களால் புதிய கட்டிடங்கள் கட்டப்படுவதை தடை கோரிய வழக்கு!

### கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படாது - உயர்நீதிமன்றத்தில் தீட்சிதர்கள் உத்தரவாதம்!

சென்னை, டிச.2-

கடலூர் மாவட்டம், சிதம்பரம், அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலில் உயர்நீதிமன்ற உத்தரவின்படி வல்லுநர் குழு மற்றும் ஆணையர் அனுமதி பெறாமல் பழமையான கட்டிடங்களை அகற்றி புதிய கட்டிடங்கள் பொது தீட்சிதர்களால் கட்டப்படுவதை தடை செய்ய வேண்டும் என இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்கண்ட மனு நீதியரசர்கள் ஆர்.மகாதேவன் மற்றும் பி.டி.ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு நேற்று (01.12.2023) வரப்பெற்றது.

விசாரணையின்போது அரசு தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ஆர்.ஆர்.அருண் நடராஜன், அனுமதியின்றி கட்டப்பட்டுவரும் கட்டுமானங்கள் குறித்த புகைப்படங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இதற்கு பொது தீட்சி தர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் மேற்கொண்டு கட்டுமானப் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படாது என உத்தரவாதம் அளித்ததை பதிவு செய்து கொண்டு வழக்கின் விசாரணையை எதிர்வரும் 06.12.2023 (புதன் கிழமை) தேதிக்கு ஒத்திவைத்தனர்.

### மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தலைமையில்

## திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் 46 பேர் உடல் உறுப்பு தானம்!

### மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெறுகிறது!

திருவள்ளூர், டிச. 2

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 46 நபர்கள் உடல் உறுப்பு தானம் வழங்கும் விழா இன்று (02.12.2023 சனிக்கிழமை) வேப்பம்பட்டு ஜி.கே. மஹாலில் மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இதில் ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த், ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலிஜெயபாலன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் உடல் உறுப்பு தானம் வழங்கும் விழாவை முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி துவக்கி வைக்கிறார்.

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணை செயலாளர் க.பிரபுகஜேந்திரன், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட நிர்வாகிகள் ம.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், ஒன்றிய குழு துணை தலைவர் எம்.பார்க்கத்துல்லாகான், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்து தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் க.ஜெயராமன், ஞா.ரமேஷ் மு.ராஜா பா.மகேஸ்வரிபாலவிநாயகம் ஏ.குட்டி (ஏ) பக்தவச்சலு, ஆர்.திலீப்ராஜ், ப.இம்மானுவேல், உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் மாவட்ட பிரதிநிதி இ.என்.சேகர் நன்றி கூறுகிறார்.



தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மண்டலம் 5, மாடம்பாக்கம் பகுதி சுதர்சன் நகர் முதல் பிரதான சாலை, தம்பியா ரெட்டி காலனி, சாந்தி நிகேத்தன் காலனி ஆகிய இடங்களில் தேங்கிய மழைநீரை ஆங்ஆங்கே மின் மோட்டார்கள் அமைத்து மழைநீரை அகற்றும் பணியை பார்வையிட்டும், பணிகளை விரைவுபடுத்துமாறு மேலும் மழைநீர் தேங்கிடாவாறு மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். உடன் மண்டல குழுத் தலைவர், பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் உடனிருந்தார்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## மாதவரம் 17வது வட்டம் வடபெரும்பாக்கத்தில் காலைச் சிற்றுண்டி!

### பொதுக்குழு உறுப்பினர் என்.பரந்தாமன் நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, டிச.2-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்குப்பகுதி 17வது வட்டம், வடபெரும்பாக்கத்தில், 27.11.2023 திங்கட்கிழமை அன்று காலை 8.00 மணியளவில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., ஆலோசனையின் படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

கழக அலுவலகத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு பகுதி அவைத்தலைவர் வா. திராவிட வீரன் மாலை அணிவித்தார். முன்னாள் வட்டச்செயலாளர் ஜி. ரவிச்சந்திரன், கழகக்கொடியினை ஏற்றிவைத்தார். மற்றும் சின்னத்தோப்பு பகுதியில் அமைந்துள்ள ஆட்டோ ஸ்டான்டு அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் என்.சந்திரன் மாலை அணிவித்தார். பகுதி துணைச்செயலாளர் கௌரி சங்கர்லால் கழகக்கொடியை ஏற்றி வைத்தார் பிறகு 300 நபர்களுக்கு துரை பசுபதி அவர்கள் காலைச்சிற்றுண்டி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.பரந்தாமன், எஸ்.சுகேந்திரன், கே. ராஜா, என். குமார், டி. ஸ்டாலின், ஏ. கோவிந்தராஜ், லதா பிரகாஷ், எம்.எஸ். ஆர். சேகர்ராஜன், ஆர். விஸ்வநாதன், சி. அருணாச்சலம், பி.அருண் எஸ்.பார்த்தசாரதி, டி.ஜெயசங்கர், டி. அமிர்தராஜ், எஸ்.தேவராஜ், எம்.பி.தாமோதரன், பி.அயோத்தியன், ஏ.எஸ்.மாரி, டி.குமார், ஜி.முனிவேல், ஜி. செல்வம், கே.அன்பழகன், எஸ்.பாரதிராஜா, எம்.இளையராஜா, கே.ரகுமான், டி.சந்திரசேகர், டி.வி.ஞானவேல், பி. கருணாநிதி மற்றும் கழகத்தோழர்களும், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

## மதுரவாயல் 148வது வட்டக் கழகக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் அறிக்கை!

சென்னை, டிச.2-

மதுரவாயல் தெற்குப் பகுதி 148வது வட்டக் கழகக் கூட்டம் நாளை (3.12.2023- ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, மேட்டுக்குப்பம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ராணி கல்யாண மண்டபத்தில் வட்ட அவைத்தலைவர் லயன் டி.தயாளன் தலைமையில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் தெற்கு பகுதிச் செயலாளரும், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி கலந்துகொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

அதுபோது பாக முகவர்கள், பூத் கமிட்டி குழு பணிகள், மாநில இளைஞர் அணி மாநாடு மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

ஆகவே இந்தக் கூட்டத்தில் வட்டத்திற்குட்பட்ட பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக முகவர்கள் குழு மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ். ரமேஷ்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.




திருவொற்றியூர் கிழக்கு பகுதி 13வது வார்டுக்கு உட்பட்ட ப்ரைம் பட்ஸ் கார்டன், நேரு மழலையர் ஆரம்ப பள்ளி, புனித பாலஸ் மகாஜன் பள்ளி, அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் புதிய வாக்காளர்கள் சேர்த்தல் மற்றும் நீக்குதல் இடம் மாற்றுதல் ஆகிய பணிகளில் கழகத்தினர் ஈடுபட்டனர். அதை மாவட்டச்செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான தி.மு. தனியரசு எம்.சி, ஆகியோர் ஆய்வு செய்தனர்.உடன் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், பகுதி நிர்வாகிகள் எம்.வி.குமார், ஆர்.குமரேசன் 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுசீலா ராஜா, வட்ட கழக செயலாளர் கேபிள் டிவி எம்.ராஜா, மற்றும் BLO2 பாக முகவர்கள் மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் முன்னாள் நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

## சட்டத்தை முடக்கி வைக்க அதிகாரமில்லை!

# தமிழ்நாடு ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் சரமாரி கேள்வி!



புதுடெல்லி, டிச. 2 -

தமிழ்நாடு சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்பட்ட 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பிவைத்ததை உச்சநீதிமன்றம் நிராகரித்துவிட்டது. மசோதாக்கள் தொடர்பாக முதலமைச் சரை அழைத்துப்பேசி, டிசம்பர் 11ஆம் தேதிக்கு முன்னதாக ஆளுநர் முடிவெடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களுக்கு ஒப்புதல் தராத ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வில் நடைபெற்று வருகிறது. கடந்த 20 ஆம் தேதி இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் 2 ஆண்டுகளாக ஆளுநர் என்ன செய்துகொண்டிருந்தார், வழக்குத் தொடரும் வரை ஏன் தாமதம் செய்தார் என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

தமிழ்நாடு அரசு கடந்த 18 ஆம் தேதி மீண்டும் நிறைவேற்றி அனுப்பிய பத்து மசோதாக்கள் மீது எப்போது முடிவெடு க்கப்படும் என்பதை டிசம்பர் ஒன்றாம் தேதி தெரிவிக்கும்படி உச்சநீதிமன்றம் கூறி இருந்தது. இந்நிலையில், இந்த வழக்கு நேற்று மீண்டும் விசார ணைக்கு வந்தது. தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி, வில்சன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைத்திருப்பதாக ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பிய 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பியது அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்றும், சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பினால் அதற்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க வேண்டும் என்றுதான் அரசியல் சாசனம் கூறியுள்ளது என்றும் தமிழ்நாடு அரசு வாதிட்டது.

10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய விவரத்தை நேற்று (30.11.2023 )மாலைதான் அரசுக்கு ஆளுநர் தெரிவித்தார் என்று தமிழ்நாடு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முதல் நாள் தான் ஆளுநர் செயல்படுகிறார் என்றும் தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் வாதிட்டனர். ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல் அரசியல் சாசனப் பிரிவு 200க்கு எதிரானது என்றும் தமிழ்நாடு அரசு குற்றஞ்சாட்டியது.

கடந்த முறை சட்டமன்றத்திற்கு திருப்பி அனுப்பிய ஆளுநர், தற்போது அதே மசோதாக்களை ஏன் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி இருக்கிறார்? என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

ஒருமுறை சட்டமன்றத்துக்கு திருப்பி அனுப்பிய மசோதாவை மீண்டும் நிறைவேற்றினால் அதனை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப முடியுமா? என்றும் நீதிபதிகள் வினவினர். Withheld assent என்று முன்பு முடிவெடுத்த ஆளுநர், தற்போது ஏன் குடியரசுத் தலைவ ருக்கு அனுப்ப வேண்டும் என்று கேள்வி எழுப்பிய நீதிபதிகள், இந்த விவகாரத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி குழப்பத்தில் உள்ளது தெரிகிறது என்று குறிப்பிட்டனர்.

மசோதாக்கள் விவகாரத்தில் 3 முடிவுகள் எடுக்கத்தான் ஆளுநருக்கு அரசியல் சாசனம் உரிமை வழங்கி உள்ளது சட்டத்தை செயலிழக்கச்செய்யவோ, முடக்கி வைக்கவோ ஆளுநருக்கு அதிகாரம் இல்லை

ஆளுநர் தேர்ந்தெடுக்கப்பட்டவர் கிடையாது ; ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டவர் அரசியல் சாசனத்திற்கு ஏற்ப ஆளுநர் செயல்பட வேண்டும் இந்த விவகா ரத்தில் ஆளுநர் உரிய முடிவை எடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.

மசோதாக்களை நிறுத்தி வைக்க ஆளுநருக்கு தனிப்பட்ட அதிகாரம் இருக்கிறதா ? என்றும் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பினர். ஆளுநருக்கு அரசுடன் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் அதற்காக சட்ட மசோதாக்களை முடக்கி வைக்க முடியாது என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பிவைத்ததை நிராகரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், அரசுடன் ஆலோசனை நடத்தி மசோதாக்கள் மீது முடிவெடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தனர்.

அப்போது, முதலமைச்சர் சென்று ஆளுநரை சந்திக்க வேண்டும் என்று அட்டர்னி ஜெனரன் கோரிக்கைவிடுத்தார். இந்த கோரிக்கையை நிராகரித்த நீதிபதிகள், ஆளுநர் ஆர்.என்.ரவி, முதலமைச்சரை அழைத்து மசோதாக்கள் தொடர்பாக ஆலோசனை நடத்தி முடிவெடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தனர்.

வழக்கின் அடுத்த விசாரணையை வரும் 11ஆம் தேதிக்கு ஒத்திவைத்த நீதிபதி கள், 10 மசோதாக்கள் தொடர்பாக டிசம்பர் 11ஆம் தேதிக்கு முன்னதாக ஆளுநர் முடிவெடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தனர்.

### ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு உச்சநீதி மன்றம் சரமாரி கேள்வி

கடந்த முறை சட்டமன்றத்திற்கு திருப்பி அனுப்பிய ஆளுநர்.. அதே மசோதாக்களை ஏன் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி இருக்கிறார்? உச்சநீதிமன்றம் 10 மசோதாக்களை ஆளுநர் ஏன் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைத்தார்? உச்சநீதிமன்றம் ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல் அரசியல் சாசனத்திற்கு எதிரானது ஆளுநர் குழப்பத்தில் உள்ளார் சட்டத்தை செயலிழக்கச்செய்ய ஆளுநருக்கு அதிகாரம் இல்லை ஆளுநர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் கிடையாது ஆளுநர் என்பவர் ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டவர் உச்சநீதிமன்றம் அரசியல் சாசனத்திற்கு ஏற்ப ஆளுநர் செயல்பட வேண்டும் - என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பிய 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பியது அரசியல் சாசனத்திற்கு எதிரானது த சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பினால் அதற்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க வேண்டும் என்றுதான் அரசியல் சாசனம் கூறியுள்ளது 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய விவரத்தை நேற்று மாலைதான் அரசுக்கு ஆளுநர் தெரிவித்தார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முதல் நாள் தான்ஆளுநர்செயல்படுகிறார்ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல் அரசியல் சாசனப் பிரிவு 200க்கு எதிரானது என்று தமிழ்நாடு அரசு வாதிட்டது.




சேலத்தில் 2வது இளைஞர் அணி மாநாட்டினையொட்டி கழக இளைஞரணியினர் மேற்கொண்ட இருசக்கர வாகனப் பிரச்சார பேரணி சேலம் மாநாட்டுத் திடலில் நிறைவு பெற்றது. நிறைவு விழா நிகழ்வில் மாநாட்டுத் திடலில் நமது தி.மு.க. ரைடர்கள் தங்களது இரு சக்கர வாகனங்களைக் கொண்டு “மாநில உரிமை மீட்போம்” என்ற முழக்கத்தினை நிலத்தில் அமைத்ததன் கழுகுப் பார்வை. அந்த முழக்க வாகன அமைப்பின் முன் நின்று கழக முதன்மைச் செயலாளர் உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, இருசக்கர வாகன பிரச்சாரக் குழு ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ்மாறன், சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி மற்றும் இளைஞரணி, மாணவரணி, நிர்வாகிகள் கலந்துகொண்டு முழக்கமிட்டனர்.




# உடன்பிறப்பே... 34

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த நாகூர் ஹனிபா அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# நாகூர் ஹனிபா : கழகத்தின் இசைக் குரல்!



ஓவியம் : ரவி பேலட்

"ஓடி வருகிறான் உதயசூரியன்"

"அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா"

"கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே"

அடுத்தடுத்து ஒலிக்கும் பாடல்களால் கழக மேடைகளைக் கட்டிப்போட்ட கம்பீரக் குரல். பெயரைச் சொன்ன மாத்திரத்தில், நினைவில் இசை அலைகளை எழுப்பும் இன்பக்குரல். இரண்டாயிரத்துக்குப் பிறகு பிறந்து, கழகப் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்ட இளைய உடன்பிறப்புகள் கழக மேடைகளில் தவறவிட்ட தன்மானக் குரல். அந்தக் குரலுக்குரிய உடன்பிறப்பு நாகூர் இ.எம்.ஹனிபா.

'இறைவன் இசை வடிவானவன்' எனச் சொல்வதுண்டு. அந்த இறையியலை தன்மான இயக்கத்துக்குத் தாரை வார்த்தவர் நாகூர் ஹனிபா எனச் சொன்னால் மிகையில்லை.

கழகத் தலைவராக, கலைஞரின் சுற்றுப்பயணங்கள் திட்டமிடப்பட்டு இருந்தாலும், திட்டமிடமிடப்படாத பல தாமதங்கள் அந்தச் சுற்றுப்பயணத்தில் நிகழும். அப்படியான நேரங்களில் அவர் வந்து சேரும் வரை கழக மேடைகளைக் கட்டுக்கோப்பாக வைக்கவும், தன்மானக் கலை உணர்ச்சி ஊட்டவும், நாகூர் ஹனிபாவின் குரல், களம் பல கண்ட வீரனாகச் செறிவோடு இயங்கும்.

## பெரியாரைப் போற்றிய பாடல்

பெயரோடு நாகூர் ஒட்டிக் கொண்டிருந்தாலும் இவர் பிறந்தது, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வெளிப்பட்டினம் என்கிற சிற்றூரில்தான். 1925-ஆம் ஆண்டு முகம்மது இஸ்மாயில் - மரியம் பீவி ஆகியோருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர் ஹனிபா. தந்தையாரின் பூர்வீகம் நாகூர் என்பதால், இவரது பெயரோடு நாகூரும் சேர்ந்து கொண்டது. பின்னர் நாகூருக்கு, குடும்பம் இடம்பெயர்ந்துள்ளது.

ஹனிபாவின் தந்தை, பெரியாரின் சுயமரியாதைப் பிரச்சாரத்தில் ஈர்க்கப்பட்டவராக இருந்தார். அந்தச் சிந்தனைகளை அறியத் தொடங்கிய ஹனிபா, தனது 10 வயதுகளில் சுயமரியாதைச் சிந்தனையை, பெரியாரை அறியத் தொடங்குகிறார்.

இயல்பிலேயே இருந்த இசை அறிவு, தமிழ் உணர்வு, பயிற்சி ஆகியவற்றால் இஸ்லாமிய பக்திப் பாடல்களைப் பாடத் தொடங்கி இருந்த ஹனிபா, பெரியார் குறித்த பாடல்களைப் பாட, அது மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது.

"பேரறிவாளர் அவர் பெரியார் எனும் ஈவெரா
ஆரறிவார் பெருமை தமிழா"

ஆபிதின் காக்கா எழுதிய இந்தப் பாடலை ஹனிபா குரலில் கேட்ட தமிழர்களுக்கு இன உணர்வும், மான உணர்வும் ஏற்பட்டது, என வரலாற்றுக் குறிப்புகளைக் காண முடிகிறது.

## கழகத்துக்குக் 'குரல்' தந்தவர்

1938-ஆம் ஆண்டில், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரமடைந்த நேரத்தில், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார் தந்தை பெரியார். பல ஊர்களில் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டார். அவர் கலந்துகொண்ட அத்தனை கூட்டத்திலும் தவறாது மேடை ஏறியவர் ஹனிபா. அப்போது அவருக்கு 13 வயது.

ஆச்சர்யம் என்னவெனில், ஹனிபா பாடல்களை ரசித்து தந்தை பெரியாரே ரொக்க அன்பளிப்பு அளிப்பாராம். அதே ஆண்டில், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில், கறுப்புக் கொடி காட்டி கைது செய்யப்பட்டுள்ளார் ஹனிபா. இப்படித் தனது அரசியல் சேர்மானங்களுக்கு ஏற்ப இசையை, தனது குரலை சுயமரியாதைக் கொள்கைகளை விதைக்கவும் பயன்படுத்தத் தொடங்கினார்.

இவரது தமிழ்ப் பற்றும், சுயமரியாதை உணர்வும் இயல்பிலேயே திருவாரூரில் மையம் கொண்டிருந்த கலைஞரை ஈர்த்ததில் வியப்பில்லை. ஆரூரில் இவர் பாடிய பாடல்களில் வற்றிய ஆற்றின் ஊற்றும் கசியும். திராவிடர் இயக்கத்தில் தீவிரமாக இயங்கி வந்த ஹனிபா, கழகம் தொடங்கப்பட்ட போதும் மிகத் தீவிரமாகக் கொள்கைக் காரராகத் திகழ்ந்தவர்.

**தமிழுக்கு ஒரு தீங்கென்றால், அந்தத் தீங்கினைத் தடுத்து நிறுத்திட, தமிழர் நலன் காத்திட, தமிழ்மொழி காத்திட, தோள் தட்டி தன்னை ஒப்படைத்துக் கொள்ளக் கூடிய தியாகச் சீலர் நாகூர் ஹனிபா.**

ஹனிபாவின் தொடர்ச்சியான அரசியல் இசைப் பயணம் கழகம் தொடங்கப்பட்ட போதும் தொடர்ந்தது. குரலால் கழகக் கொள்கைகளைக் கொண்டு சேர்க்கத் துணை நின்றது.

## நாகை வேட்பாளர்

"பெரியார் பெயரை உச்சரித்தால், அண்ணாவின் பெயரைச் சொன்னால் ஒருவித முகக்கோணலுடன் சமுதாயத்தில் பலர் பார்த்து ஒதுக்கிய நேரத்தில் - அவர்களின் பெயரைச் சொன்னால் பிழைக்கவே முடியாது எனும் அச்சுறுத்தல் ஆட்டிப்படைத்த நேரத்தில் - இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, மேடைதோறும் இசைமுழக்கம் செய்த அனிபாவின் இளமைத் தோற்றத்தைக் கண்டிருக்கிறேன்" என அந்தக் காலத்தைக் குறிப்பிடுகிறார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அண்ணாவின் அடியொற்றி, கலைஞரின் நட்பு கொண்டு தனது களப்பணிகளாலும், குரல் வளத்தாலும் கழகத் தொண்டர்களைக் கட்டிப்போட்டவர், இஸ்லாமியப் பாடல்கள், திரைத்துறைப் பாடல்கள் எனப் பங்களிப்பும் செய்துள்ளார். எனினும், முழு முற்றாக கழக மேடைகள்தான் ஹனிபாவின் அடையாளமாக இருந்தன. ஒலிவாங்கி இல்லையென்றாலும் மேடையிலிருந்து கடைசி இருக்கை வரை கேட்டு மகிழும் கம்பீரக் குரலாக ஹனிபா குரல் இருந்தது.

1955-ஆம் ஆண்டு அவர் பாடிய 'அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா' பாடல், பட்டி தொட்டியெல்லாம் ஒலித்தது. கழகத்தின் கொள்கைகளைப் புரிந்து கொள்வதற்கு முன்னர், குரல் வழி உணரத் தொடங்கினர் மக்கள். 1957-ஆம் ஆண்டு கழகம் முதன்முதலில் தேர்தலில் நிற்கும்போது, நாகப்பட்டினம் தொகுதியில் நிற்க விரும்பினார் கலைஞர். ஆனால், பேரறிஞர் அண்ணா, கலைஞரை கடைசிநேரத்தில் குளித்தலை தொகுதியில் நிற்க வைத்தார். அதேநேரத்தில், நாகை தொகுதிக்கு அண்ணா அறிவித்த வேட்பாளர் நாகூர் ஹனிபா.

கழக மேடைகளில் பாடுபவர் என்பதற்காக ஹனிபாவுக்கு வாய்ப்பு கிடைத்திடவில்லை, அவர் தீவிர கொள்கைக்காரராக இருந்தவர். கழகத்தின் அத்தனை போராட்டங்களிலும் முன்னிலையில் இருந்தவர். குரல் வழி பங்களிப்பு கூடுதல் திறமையாக இருந்தது. கழகத்தின் அத்தனை வளர்ச்சிப் படிநிலைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் என்பதால், வேட்பாளர் வாய்ப்பு தேடி வந்தது. ஆனால், மிட்டா மிராசுகள் நின்ற தேர்தலில், கழகம் கால் பதித்ததே பெரும் போராட்டமாக இருந்த சூழலில் நாகூர் ஹனிபா 13 சதவிகித வாக்குகள் பெற்று மூன்றாம் இடத்தில் இருந்தார். தேர்தலில் வெற்றி வாய்ப்பு இல்லையென்றாலும், மக்கள் மனதில் வெற்றிக்கொடி நாட்டியவராக இருந்தவர்.

## வக்பு வாரியத் தலைவர்

கழக மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், பிரச்சாரம் எனச் சுற்றிச் சுழன்ற ஹனிபாவின் பயணத்துக்குப் பரிசாக 1971-ஆம் ஆண்டில் சட்டமேலவை உறுப்பினராக்கினார் கலைஞர். கழகத்தின் சோதனையான காலகட்டத்தில், கலைத்துப் போடப்பட்ட விளையாட்டுபோல கழகத்தினர் திகைத்த நேரத்தில் 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததடா' என இவர் குரலெடுத்துப் பாடியது கோடிக்கணக்கான தொண்டர்களின் இதயக் குரலாக எதிரொலித்தது.

இவரின் இயக்கப் பிடிப்பையும், இசைத் தொண்டினையும் பாராட்டும் வகையில், 1989-ஆம் ஆண்டு கழகத்தின் முப்பெரும் விழாவில், கலைஞர் விருதினை தனது கரங்களால் கொடுத்து மகிழ்ந்தார் கலைஞர். பின்னர் வக்பு வாரியத் தலைவராகவும் நியமித்து அழகு பார்த்தார். கலைஞரின் ஆருயிர் நண்பர், கோடான கோடி தொண்டர்களின் இதயக் குரல், தனது 90-வது வயதில் 2015-ஆம் ஆண்டில் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது.

"சிறு வயதிலேயே தமிழ், தமிழுணர்வுடன் வளர்ந்தவர் நாகூர் ஹனிபா. தமிழுக்கு ஒரு தீங்கென்றால், அந்தத் தீங்கினைத் தடுத்து நிறுத்திட, தமிழர் நலன் காத்திட, தமிழ்மொழி காத்திட, தோள் தட்டி தன்னை ஒப்படைத்துக் கொள்ளக் கூடிய தியாக சீலர் நாகூர் ஹனிபா. என்னை விட ஓரிரு வயது குறைந்தவராயினும் நரைத்த தாடியுடன் கழகத்தின் கொடிமரமாய் மிடுக்காகத் திகழ்வதையும் கண்டு பூரிப்புக் கொள்கிறேன்" எனப் புகழாரம் சூட்டினார் கலைஞர். கலைஞரின் சொற்கள் கொண்டு, ஹனிபாவின் பாடல் கொண்டு கழகக் கொடிமரம் என்றைக்கும் இளமையாகப் பூத்து நிற்கும். கல்வெட்டாக நிலைத்து நிற்கும்!

...துடிக்கும்

## காவியாகும் மருத்துவம்!

"மக்களின் உயிர் காத்து, அவர்களின் ஆயுளை நீட்டிக்கும் நவீன அறிவியல் மருத்துவத்தை நீர்த்துப் போகச் செய்கிற வகையில் 'மிக்ஸோபதி', ஒருங்கிணைந்த மருத்துவம், 'காமன் ஃபவுண்டேஷன் கோர்ஸ்ஸில்', வேத கால மருத்துவம், ஆன்மிக மருத்துவம், சோதிட மருத்துவம் என்று போலி அறிவியலைத் திணிக்கும் முயற்சிகள் நடந்துகொண்டு வருகின்றன" என்று சில நாட்களுக்கு முன்பு நிகழ்ச்சி ஒன்றில், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் பேசியிருந்தார்.

அது எவ்வளவு உண்மை என்பதை, தற்போது தனது நடவடிக்கையின் மூலம் நிரூபித்திருக்கிறது தேசிய மருத்துவ ஆணையம். இந்த ஆணையம்தான் நம் நாட்டின் மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவர்கள் ஆகியோரை ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனம். இதுநாள் வரையில் அதனுடைய இலச்சினையில் அசோகர் சிங்கத் தூண்தான் இடம் பெற்றிருந்தது. தற்போது அதனை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் 'தன்வந்த்ரி' எனும் இந்துக் கடவுளின் படத்தை வைத்துள்ளது. ஆயுர்வேத மருத்துவ முறையைப் பின்பற்றுபவர்களின் கடவுளாக தன்வந்த்ரி இருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அந்த இலச்சினையில், 'இந்தியா' என்ற பெயர் நீக்கப்பட்டு, 'பாரத்' என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்வியும், மருத்துவச் சேவையும் சாதி, மதம், பொருளாதாரப் பாகுபாடுகள் எதுவுமின்றி, அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் ஒரு நாட்டின் குறிக்கோளாக இருக்க வேண்டும். ஏற்கெனவே, கல்விக்கு, காவிக் கறை பூசிய ஒன்றிய பா.ஜ.க. அரசு, இப்போது மருத்துவத்துக்குக் காவிச் சாயம் பூச வருகிறது.

## ஃப்ளாஷ்பேக்



### வணக்கம் வைத்த தலைவர்!

1993-ஆம் ஆண்டு கழகத்துக்கு ஏற்பட்ட சோதனை காலத்தில், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து கிளைகள் தோறும் இருவண்ணக் கொடிகளை ஏற்றி, கழகத்தை மீட்டெடுத்ததில், அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளராகப் பணியாற்றிய தற்போதைய தலைவருக்கு முழுப்பங்குண்டு. அப்படிச் சுற்றுப்பயணம் செய்யும்போது ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், முசிறி ஒன்றியம், குணசீலம் ஊராட்சிக்கு வருகை தந்தார் தளபதி அவர்கள்.



சேகர் அருண்

முன்னாள் முசிறி ஒன்றியக் கழகச் செயலாளர் தே.பொன்னுசாமி அவர்களின் மகன், எனது தந்தையார் சேகர் அவர்கள் ஏற்பாடு செய்த கொடியேற்றும் நிகழ்வில், அப்போதைய மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அன்பு மாமா அன்பில் பொய்யாமொழி அவர்களுடன் வருகை தந்து கல்வெட்டு திறந்து, கழகக் கொடியேற்றினார். கொடியேற்றிவிட்டுப் புறப்படும் தருவாயில், சிறுவனாக இருந்த ஆர்வம் மிகுந்த உற்சாகத்தில் அவரது கார் அருகிலிருந்து, தலைவருக்கு வணக்கம் தெரிவித்தேன். உடன் பதிலுக்கு வணக்கம் தெரிவித்த மாண்பு, ஒரு சிறுவனையும் மதிக்கக் கூடிய பண்பு என்பது தலைவர் கலைஞருக்கு எப்படி இருந்ததோ, அதேபோல் இவரிடத்திலும் இருந்ததைக் கண்டு நாங்கள் மகிழ்ந்தோம்.

**-பி.சேகர் அருண், திருச்சி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மாற்றமில்லாத மரியாதை

**1969 பேரறிஞர் அண்ணா மறைந்த ஆண்டிலிருந்து, ஒவ்வோர் ஆண்டும் அவரது நினைவு நாளின்போது அமைதி ஊர்வலமாகச் சென்று அண்ணா சதுக்கத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செய்து வருகிறது கழகம். ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் இதில் எந்த மாற்றமும் கிடையாது. 1978-ஆம் ஆண்டில் மட்டும் அமைதி ஊர்வலத்துடன், அண்ணா சிலை திறப்பு விழாவும் நடைபெற்றது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 317




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131